# ஞானசம்பந்தம்


தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | சுக்கில ஆண்டு ஆடித்திங்கள் 10 – 8 – 89 | இதழ் 9

தென்திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி திருக்கோயில்

மகாகும்பாபிஷேகவிழா

7–9–89 வியாழன் காலை 9-30 மணிக்கு நடைபெறுவதை முன்னிட்டு



தலவிருட்சமாகிய முல்லைக்கொடி

கிளுவைமரத்தில் படர்ந்துள்ளகாட்சி இதழை அலங்கரிக்கின்றது.

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

---

மாயப் பிரபஞ்ச வாழ்க்கை
பொய்யென்று மனத்திலுற்றுக்
காயத்தை நீக்கிப் பரிபூர
ணத்திணைக்கைக்கொடென்னைத்
தேயத் திடைக்கிடந் துழலச்
செய்தனை தீங்குபெற
ஞாயத்தை யெற்கருள் ஞானப்ர
காச நவமணியே.

— நவரத்தினமாலை 1


ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்



உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | 10-8-89 | இதழ் 9


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | திருக்குடமுழுக்குக் காண வாரீர்! ... | 449 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... | 456 |
| 3 | வரவேற்புக் கவிதை ... | 462 |
| 4 | தேவாரம்-சொல்வழக்கு | 464 |
| 5 | திருக்கைக்கோட்டி ... | 465 |
| 6 | மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ... | 467 |
| 7 | ஸ்ரீ இடபாரூடமூர்த்தி | 472 |
| 8 | போதமும் சித்தியும் ... | 474 |
| 9 | மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ... | 477 |
| 10 | அதிபத்தர் ... | 481 |
| 11 | ஜவஹர்லால்நேரு ... | 485 |
| 12 | செய்திகள் ... | 488 |
| 13 | எதிர்காலம் ... | 493 |
| 14 | பார்வையாளர் குறிப்பு (நகல்) | 466, 473 |
| 15 | கடிதம் ... | 476 |
| 16 | இதழ்வழிச் சைவசமயக் கல்வி V. பாடம்-7. ... | 497 |

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 9

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில - ஆடி 10—8—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல் ஆல வாயிலாய்!
நின்நயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

---

திருமுல்லைவாயில்

## திருக்குடமுழுக்குக் காண வாரீர்!

---

திருச்சிற்றம்பலம்

துளிமண்டி யுண்டு நிறம் வந்த கண்டன்
நடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி உம்பர் உலகம் கடந்த
உமைபங்கன் எங்கள் அரனூர்
களிமண்டு சோலை கழனிக்கலந்த
கமலங்கள் தங்கும் மதுவில்
தெளிமண்டி உண்டு சிறைவண்டு பாடும்
திருமுல்லை வாயில் இதுவே.

— திருஞானசம்பந்தர்.

கடுவாயர் தமைநீக்கி என்னை ஆட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல்வாயில்
நெடுவாயில் நிறைவயல் சூழ் நெய்தல் வாயில்
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல் வாயில்
மடுவார்தென் மதுரைநகர் ஆல வாயில்
மறிகடல்சூழ் புனல்வாயில் மாடம் நீடு
குடவாயில் குணவாயில் ஆன வெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடா வன்றே.

— திருநாவுக்கரசர்.

## ஸ்ரீ அணிகொண்டகோதையம்மை துதி

பூமகளும் நாமகளும் போற்றிசைக்கும்
பதத்தாளைப் போதார் தெய்வத்
தாமநறும் குழலாளைத் தடவரையைப்
பழித்ததனத் தடத்தி னாளைக்
காமனுருக் கடிந்தவனும் காமமுறப்
பொருதகயல் கண்ணி னாளைப்
பாமருவு முல்லைநகர் அணிகொண்ட
கோதையையாம் பணிதல் செய்வாம்.

— வடுகநாத தேசிகர்.

திருச்சிற்றம்பலம்

கடவுள் ஒருவரே. அவர் அறிவே உருவாக இருக்கிறார். எங்கும் இருக்கிறார்; எல்லாமாய் இருக்கிறார். உயிர்களோ எண்ணற்றன. அவை தாமே அறியாது அறிவித்தால் அறியும் நிலையின. உலகமோ - சடம் - அறிவு இல்லாதது. அறிவே வடிவமாக விளங்கும் இறைவன் அறிவித்தால் அன்றி அறிய மாட்டாத உயிர்களை ஈடேற்றம் செய்து உயர்த்தும் பொருட்டு இந் நிலவுலகில்தலங்கள் தோறும் எழுந்தருளி இருக்கிறார். அருள்பாலிக்கிறார். ஆட்கொள்கிறார். இங்ஙனம் இறைவன் அருள்பாலிக்கும் தலங்கள் பலவற்றுள் சீகாழிக்கு அருகில் உள்ள தென்திருமுல்லைவாயில் வளம்பல மிக்கு நலம்பல நல்கும் திவ்விய திருத்தல மாகும்.

வடதிருமுல்லைவாயில் :

புண்ணியப் பேறுமிக்க தமிழ் நாட்டில் திருமுல்லை வாயில் என்ற திருப்பெயருடன் இரண்டு தலங்கள் உள்ளன. தமிழ் நாட்டின் தென்பகுதியில் அமைந்த இத்திருத்தலம் தென் திருமுல்லை வாயில் என வழங்கப் பெறுகின்றது. மற்றொன்று, சென்னையை அடுத்து, தமிழ்நாட்டின் வடபகுதியில் அமைந்திருப்பதால் 'வடதிருமுல்லைவாயில்' என வழங்கப் பெறுகின்றது. தொண்டைமான் என்னும் அரசன் யானை மீதேறி வேட்டையாடச் சென்றபோது யானைக்காலை முல்லைக் கொடி சுற்றித் தடைசெய்தது. தொண்டைமான் கீழே இறங்கி அக்கொடியை வெட்டினான். அவ்வெட்டு முல்லைப்புதரில் இருந்த சிவலிங்கத்தின் மீதுபட்டு இரத்தம் பெருகியது. அதுகண்ட மன்னன் தவறு நிகழ்ந்துவிட்டதை அறிந்து உடைவாளால் தன்னுயிரை மாய்க்க முற்பட்டான். அப்போது அவனைத் தடுத்தாட் கொண்டார் வடமுல்லைவாயில் மாசிலாமணி ஈசர். இது வடதிருமுல்லைவாயில் வரலாறு இத்தலத்தை ஸ்ரீ சுந்தரர் "திருவும்மெய்ப்பொருளும்" என்ற திருப் பதிகத்தால் பாடிப் பரவியுள்ளார்.

தென்திருமுல்லைவாயில் :

கிள்ளி வளவன் என்ற சோழமன்னன், வேட்டை யாடும் பொருட்டு முல்லை வனப் பகுதியாகிய இத்தலத் தை அடைந்தான். வளவன் குதிரையை வேகமாகச் செலுத்தினான். அதன் கால்கள் முல்லைக்கொடியில் சிக்கிக் கொண்டன. வளவன் குதிரையினின்றும் கீழே இறங்கிப்பார்த்தான். முல்லைக்கொடி அமைந்த புதரை வெட்டினான். முல்லைப் புதரின் கீழ் இருந்த சிவலிங்கத் தின் மீது அரசனின் உடைவாள் பட்டது. குருதி பெருகிற்று. அரசன் பதைத்தான். சிவாபராதம் செய்த தன்னை உடைவாளால் மாய்த்துக் கொள்ள முற்பட்டான். அரசன்முன் பெருமான் தோன்றினார்.

மன்னன் மனத்துயர் மாற்றினுர். கிள்ளி வளவன் அச்சிவலிங்கம் இருந்த இடத்தில் திருக்கோயில் எடுப்பித்தான். நித்திய வழிபாடுகளும் சிறப்பு விழாக்களும் நிகழ்த்த வழிவகுத்து இறையருள் பெற்றுன் இது தென்திருமுல்லை வாயில் வரலாறு. காவிரியின் வடகரைத் தலங்களுள் ஏழாவதாக விளங்கும் தென் திருமுல்லைவாயில் மூர்த்தி, தலம், திர்த்தம் என்ற மூன்ருலும் சிறப்புடையது. வங்கக் கடற்கரையில் அமைந்து விளங்குவது. இறைவன் ஸ்ரீமுல்லைவனநாதர். இறைவி அணிகொண்டகோதை அம்மை. வரசித்தி விநாயகர் அன்பர்க்கு வேண்டுவன நல்கி அருள்பாலிக்கின்றுர். தலவிருட்சம் முல்லை ஆதலால் இத்தலம் திருமுல்லைவாயில்எனவழங்கப்பெறுகின்றது. இத்தலத்தின் சிறப்புக்கள் பலவாகும்.

திருத்தலச் சிறப்பு :

திருக்கயிலாயத்தில் இறைவி ‘ அஞ்செழுத்தின் அடைவும், அடைவினில் நெஞ்சு அழுத்தும் நிலையும் ’ தமக்கு அருளுமாறு கயிலாயநாதரை வணங்கி, பஞ்சாட்சர உபதேசம்பெற்று தென்திருமுல்லைவாயிலை அடைந்து முல்லைவனநாதரை முறைப்படி தொழுது, ஐந்தெழுத்து ஓதிச் சிவஞானம் கைவரப்பெற்ருர். தலமான்மியமாகிய இதனை “ அணிகொண்ட கோதை அவள் நன்றும் ஏத்த அருள்செய்த எந்தை ” என ஞானசம்பந்தர் குறித்துப் போற்றிப் பாடியுள்ளார். அம்பிகை திருவைந்தெழுத்து ஓதிச் சிவஞானம் பெற்ற தலம் ஆதலால் மகோதயம், சூரிய சந்திரகிரஹணங்கள், அமாவாசை, வியதீபாத யோக காலங்களில் இங்குள்ள கடலில் நீராடி இத்தலத்துப் பெருமானை வழிபட்டுத் திருவைந்தெழுத்து ஓதுவோர் ‘ பாச பந்தங்கள் நீங்கிப் பரகதி அடைவர் என்பது தலபுராணம் கூறும் சிறப்பு.

மேலும் இத்தலத்து இறைவர் தன்னடைந்தார்க்கு இன்பங்கள்தருபவர். முல்லைவனநாதரை மனத்தகத்தே

கொண்டு வழிபட்டாள் ஒரு பரத்தை. அவள் தன்னுடன் தொடர்புகொண்ட ஆடவரை அன்றைய ஒரு நாளில் கணவராகவேகொண்டு ஒழுகினள்: சிவபக்தியும் பரத்தமையில் ஓர் ஒழுங்கு நெறியும்கொண்ட இவளுக்குச் சிவகதி அளித்து இறைவன் ஆட்கொண்டான் என்பதும் தலவரலாறு.

**தீர்த்தச் சிறப்பு :**

பாண்டியநாட்டில் வாழ்ந்து சிவவேள்விகள் பல செய்தவர் சுசாவி என்ற அந்தணர். அவருக்கு எட்டுப் பிள்ளைகள் இருந்தனர். மூத்தவர் வாமதேவர். இவர், தம்தந்தையார் இறந்தபின்னர் அவர்கட்டளைப்படியே அவருடைய எலும்புகளைப் புண்ணியதீர்த்தங்கள் பலவற்றிலும் இட்டார். தென்திருமுல்லைவாயிலாம் இத்தலத்தில் அமைந்த விஷ்ணு தீர்த்தத்திலும் இட்டார். தீர்த்தம் பட்டவுடனே எலும்பு இரத்தினமாக மாறியது. இத்தீர்த்தக்கரையிலேயே பிதிர்க்கடன் ஆற்றினர் என்பது தீர்த்தச் சிறப்புப் பற்றிய வரலாறு. இத்தீர்த்தம் அன்றி, வாயுதிசையில் உள்ள கிணற்றில் கங்கை வாசம் செய்கின்றாள். பிரமதீர்த்தம், சந்திரதீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களும் உள்ளன.

**முந்தைய திருப்பணி குடமுழுக்கு :**

இத்தலம் ஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகம் பெற்ற சிறப்பினது திருநாவுக்கரசர் தேவாரத்தில் வைப்புத் தலமாக இடம் பெற்றுள்ளது. இத்தலத்தின் சிறப்புக்களை விளக்கும் 415 பாடல்களையும் 9 சருக்கங்களையும் கொண்ட திருமுல்லைவாயில் தல புராணம் வடுகநாத தேசிகரால் பாடப்பெற்றுள்ளது. கி. பி. 1770 லேயே தருமை ஆதீன அருளாட்சியில் இத்திருத்தலம் இருந்தது என்பதை விளக்கும் செப்பேடுகள் தருமை ஆதீனத்தில் உள்ளன. இத்தகு பெருமைகள் பலவற்றையும் கொண்ட இத்திருக்கோயில் திருக்குடமுழுக்கு 19 ஆவது குருமகாசந்நிதானத்தின் அருளாட்சியில்

1912 இல் சீகாழி பெருநிலக்கிழார் திரு. சிதம்பரநாத முதலியாரவர்களின் நன்கொடைப் பணியாகச் செய்விக்கப்பெற்றது. 1955 இல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அருளாட்சியில் தேவஸ்தானச் சார்பிலேயே அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

**இன்றைய திருப்பணி குடமுழுக்கு :**

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்வண்ணம் இதுபோது சிதம்பரம் திரு. ஆர். இராமநாதன் செட்டியார், திரு இராமலிங்கம் செட்டியார், திருமுல்லைவாயில் திரு. அருள் இராமநாதன், திரு. பக்கிரிசாமி, மற்றும் உள்ளூர், வெளியூர் பக்தர்கள் நன்கொடைப்பணியாக சுவாமி, அம்பாள் விமானங்கள், விநாயகர், சுப்பிரமணியர், மகாலக்ஷ்மி, வடதிருமுல்லைவாயில் ஸ்ரீ மாசிலாமணி ஈசர், ஸ்ரீ சண்டேசர் விமானங்கள் பழுதுபார்த்து வண்ணம் தீட்டியும், திருக்கோயில் முகப்பில் பஞ்சமூர்த்தி சுதை உருவங்கள் அமைத்து வண்ணம் தீட்டியும், அம்பாள் கோயிலின் வடபால் புதிதாக துர்க்காதேவிக்கு விமானம் கட்டிப் பிரதிட்டை செய்தும், மின்சாரவயர்கள் புதுப்பித்தும், மதில் சுவர்கள் பழுதுபார்த்து வெள்ளையடித்தும், திருக்கோயிலுக்கு முன்புறமுள்ள விநாயகர் கோயில் திருப்பணி செய்து வண்ணம் வைத்தும் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானச் சார்பில் 104' × 22' அளவில் இத்திருக்கோயில் பஞ்சமூர்த்தி சுதைச் சிற்ப நுழைவாயில் முதல் சுவாமி சந்நிதி மண்டபமவரை ஆஸ்பெஸ்ட்டாஸ்ஷெட்டுஅமைத்தும், திருப்பணி பூர்த்திசெய்யப்பெற்று நிகழும் சுக்கில ஆண்டு ஆவணித்திங்கள் 22 ஆம் நாள் (7-9—1989) வியாழக்கிழமைகாலை 9-30மணிக்கு மகாகும்பாபிஷேகம்

வேதசிவாகம முறைப்படி, வேதசிவாகம பாராயணம், திருமுறைப் பாராயணத்துடன் சிறப்பாக நடைபெற உள்ளது. மகாகும்பாபிஷேக விழாவில் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசித்தும், அவரவர்களும் இயன்ற பணிகளில் பங்குகொண்டும் மும்மை நலமும் பெற்றுப் பயனடைவார்களாக.

"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும். — குருஞானசம்பந்தர்.

பொருள் வளம் புரிவீர் ! அருள் வளம் பெறுவீர் !

---

## சிவாலய தரிசனம்

சிவாலய தரிசனம் ஒவ்வொருவருக்கும் மிக அவசியமானது. அப்பர் சுவாமிகள் திருவங்கமாலையில் சிவவழிபாட்டின் சிறப்பை விரிவாக உணர்த்தியருளுவதைக் காணலாம் சிவாலய தரிசனம் செய்வோர் நீராடிப் புனிதமுடையவராய்ப் பிராகாரங்களை வலம் வந்து உள்ளே சென்று பலிபீடம், நந்தி கொடிமரம் ஆகியவற்றைத் தரிசித்து வீழ்ந்து வணங்கி உள்ளே சந்நிதியை அடைந்து சிவதரிசனம் செய்தல் வேண்டும்.

ஆலயங்களுக்குச் செல்வோர் இயன்ற அளவு இறைபணி செய்யவேண்டும். விளக்கு பூமாலை, பழம் முதலியன கொண்டு சென்று வழிபடல் வேண்டும். ஆறுகாலங்களில் செய்யப்படும் பூசைகளை வழிபடுவதால் விளையும் பயன்களைப் பின்வரும் வெண்பா தெரிவிப்பதைக் காணலாம்

"காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம் — மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயரமெல்லாம் விடும்."

சைவசமய அடிப்படைத் தத்துவங்களை, ஆலயமும் அங்கு நடைபெறும்வழிபாடும் நமக்கு உணர்த்துகின்றன. சிவாலயத்தில் விளங்கும் சிவலிங்கம் - பதி நந்தி - பசு பலிபீடம் - பாசம், பசு, தம்மைப்பிணித்திருக்கும் பாசங்களின் நீங்கிப்பதியை அடைதலைப் பல வகைகளில் ஆலயம் நமக்குக் காட்டுகிறது.

— திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு
சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரியில்
மயிலாடுதுறை மையத்தில் நடைபெற்ற
"சித்தாந்தக் கலாநிதி" வகுப்புத் தொடக்க விழாவில்
வழங்கியருளிய

# ஆசியுரை

10—7—89

"நிலைமை சொல்லு நெஞ்சே தவம்என் செய்தாம்
கலைகளாய வல்லான் கயிலாய நன்
மலையன் மாமயிலாடுதுறையன் நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே"

— அப்பர்.

### எட்டு மையங்கள் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு சைவ சித்தாந்த மாலைநேரக் கல்லூரியில் முதலாண்டில் பயில்வோர், புறச்சமயங்களையும் அகச்சமயங்களையும் அறிமுகப் படுத்தும் நூல்களையும், சைவ சித்தாந்த உண்மைகளை அறிமுகப் படுத்தும் உண்மை விளக்கம் திருவருட்பயன் ஆகிய நூல்களையும் பாட நூல்களாகப் பயில்கின்றனர் இரண்டாம் ஆண்டு வகுப்பில் பயில்வோர், புறச்சமயஅகச்சமயக் கருத்துக்களை விளக்குப நூல்களையும், சைவசித்தாந்த உண்மைகளை விளக்கும் சிவஞான போதம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களையும் பாடநூல்களாகப் பயில்கின்றனர் இவ்வகுப்புக்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு இன்று சான்றிதழ்கள் வழங்கப் பெறுகின்றன. இது போன்று தமிழகத்தில் ஏழு மையங்களில் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றோர் முதலாம் ஆண்டில் 59 பேரும் இரண்டாம் ஆண்டில்

103 பேரும் என்று குறிப்பிட்டார்கள். இங்ஙனம் இம்மாலை நேரக் கல்லூரி ஏழு இடங்களிலும் சிறப்பாக இயங்கி வருவதும் இவற்றின் வயிற்சியாளர்கள் பலரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு சமய உண்மைகளைப் புரிந்து கொள்ள முன்வந்திருப்பதும் மகிழ்ச்சியைத்தருகின்றன. மேலும் மகிழ்ச்சி ஊட்டும் வகையில், இவ்வாண்டு, ஏழு கல்லூரிகளுடன் எட்டாவது மையம் ஒன்று ஸ்ரீ வைகுண்டத்தில் குமரகுருபரர் கலைக் கல்லூரியில் தொடங்க இருக்கிறது.

## அட்ட மூர்த்தம் :

எட்டு என்னும் எண் இறைவனேடு மிகவும் தொடர்புடைய எண் ஆகும். இறைவன் எல்லாப் பொருள்களிடத்தும் ஒன்றாகக் கலந்து இருக்கிறான். உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் எட்டாகப் பகுப்பர். அந்த எட்டாவன : நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஞாயிறு, திங்கள் உயிர் ஆகியனவாம். இவ் எட்டுப் பொருள்களைத் தவிர உலகில் வேறு பொருள்கள் இல்லை. இவ் எட்டில் அனைத்துப் பொருள்களும் அடங்கி விடுகின்றன. இங்ஙனம் இறைவன் தங்கி இருக்கிற இந்நிலையை அட்ட மூர்த்தங்கள் என்பர். "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியும் காற்றுமாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி" என்பது அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகம். இவ் எட்டும் இறைவன் தங்கி இருக்கும் இடங்களைக் குறிப்பது இனி அவன்றன் குணங்களைக் காண்போம்.

## எண் குணத்தான் :

இறைவன் எண் குணங்களை உடையவன் என்பார் திருவள்ளுவர் எண் குணங்களை உடைய இறைவனின் திருவடியை வணங்காத தலை பயனற்றது என்னும் பொருளில்,

> "கோளில் பொறியில் குணம் இலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை"

என்று கூறுகிறார் குறட்பொருளைக் காண்போம். கோள்-கொள்ளுதல் இல்-இல்லாத பொறி-கண் காது முதலிய அறிகருவிகள். இல்-போல, குணம்-பயன், இலவே-இல்லை கோள் இல் என்பதில் உள்ள இல் இன்மையைக் குறிக்கும் பொறியில் என்பதில் உள்ள இல், போல என்னும் உவமையைக் குறிக்கும். ஒலியைக் கொள்ளாத அதாவது பற்றாத காது ஒளியைப் பற்றாத கண் முதலியன

எப்படி நமக்குப் பயன் தரவில்லையோ அதே போல் எல்லாவற்றையும் அறிந்து செயல் படுத்தும் தலை எல்லாவற்றுக்கும் தலைவனாகவுள்ள இறைவனை அறிந்து வணங்க வேண்டும். அப்படி வணங்கவில்லையானால் அத்தலையால் மனிதனுக்குப் பயன் ஏதும் இல்லை குருட்டுக் கண், செவிட்டுச் செவிகளால் பயன் பெறாத வாறு போல என்று தெளிவுறுத்துகிறார்.

எண் குணங்களாவன :

இக்குறட்பாவில் 'எண் குணத்தான்' என்று இறைவன் போற்றப் பெறுகிறான். எண் குணங்களாவன : தன்வயத்தனாதல், தூயஉடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவேபாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பன. தன்வயத்தனாதல் என்பது, இறைவன், சுதந்திரம் உடையவன் என்பதைக் குறிக்கிறது. மனிதர்கள் எவரும், பிறர் ஒருவருக்கு வயப்படாமல் வாழ முடியாது ஆதலின், பிறர்யாருக்கும் வயப்பட வேண்டாததன்மை உடைய இறைவன் ஒருவனே முழுச்சுதந்திரம் உடையவன் ஆகிறான். இங்ஙனம் பிறர் எவருக்கும் ஆட்படாத தன்மை இறைவனுக்கு இருப்பதற்குக் காரணம், மாயா சரீரம் கொள்ளாமல் தூய உடம்பினை உடையவனாயிருத்தலினால் ஆகும். அவன், அதனால், கருவி, கரணங்களின் துணை இன்றியே இயற்கையிலேயே எல்லாவற்றையும் உணரும் நிலையுடையவன் ஆகிறான். மனிதர்கள் கண், காது, மூக்கு என்னும் கருவிகளின் துணை இன்றி எதனையும்உணரமுடியாது ஆதலின் இவர்கள் இயற்கைஉணர்வினர் அல்லர். இவற்றுள் எதுவும் இன்றியே எல்லாவற்றையும் உணரும் தன்மைஇறைவனுக்கு உண்டு. எனவே அவன் இயற்கைஉணர்வினை உடையவன், அவன் முற்றும் உணரும் நிலையினையும் உடையவன். மனிதர்கள் கண், காது முதலிய கருவிகளைக் கொண்டு, உணரும் செயற்கை உணர்வுடையவர்களே அன்றி இயற்கை உணர்வுடையவர்கள் அல்லர். அதிலும் ஒரு பகுதி உணர்வுடையரேயன்றி முற்றிலும் உணரும் தன்மையும் இல்லாதவர்கள். இறைவனோ காலம் இடையிட்டும் தேயம் இடையிட்டும் நடந்தது, நடப்பது, நடக்கப்போவது அனைத்தையும் முற்றும் உணரும் தன்மையுடையவன். அவன் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிஇருப்பவன். மனிதர்கள் செயற்கையால் மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்ற நிலையில், பாசங்களினின்றும் நீங்க வேண்டியவர்கள். இத்தகைய இறைவன், பேரருளையும் முடிவிலாத ஆற்றலையும், வரம்பு இல்லாத இன்பத்தையும் உடையவனாக விளங்கி, இவ்வுலக மக்களை வாழ்விக்கின்றான்.

தன்னைப்போலச் செய்யும் தயாளன் :

இவ் இறைவனை மனித உயிர்கள் ஏன் வணங்க வேண்டும் எனில், அவனை வணங்கி, வழிபட வழிபட அவனது குணங்களும் செயல்களும் உயிர்கள் மாட்டும் வந்து இன்பத்தைத் தரும். ஆதலின். இங்ஙனம் வழிபடல்வேண்டும். வழிபட்டால் குணங்கள் வந்து தங்குமா? என்னும் கேள்வி அடுத்து எழும். உலகியலில் ஓர் உதாரணத்தை எடுத்துக்காட்டினுல் இனிது விளங்கும். தந்தையையும் தாயையும் சார்ந்துவாழும் குழந்தைகள் அவர்கள் குணத்தை நாளடைவில் பெற்றுவிடுதல் போலவும், கணவனைச் சார்ந்து வாழ்ந்துவரும் மனைவி, காலப்போக்கில் கணவனின் குணுதிசயங்களை அடைந்துவிடுதல் போலவும், இறைவனின் எண் குணங்களையும் சதாகாலமும் சிந்தித்துவருவோர் அக்குணங்கள் அனைத்தும் கைவரப்பெறுவர் என்பது அனுபவமாம்.

மேலும் இறைவன் தன்னை வழிபடுவோர்க்குத் தன் குணங்களை அருளித் தன்னிலைக்கு உயர்த்துகிறுன் என்பது ஆன்ஞேர்களின் அனுபவம். அப்பர் சுவாமிகள் வேளூர்த் திருத்தாண்டகத்தில்,

“ தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போல்
சிவலோக நெறியறியச் சிந்தைதந்த
அருளானை ... ... ... ... ... ... .. ... ”

என்ற வரிகளில் இக்கருத்தை அருளுகின்ருர். இறைவன் ஒருவன் தான் தன்னைப்போல மற்றவர்கள் வரவேண்டும் என்னும் கருணை உடையவன். மனிதர்கள் எத்தனைபேர் தங்களைப்போல மற்றவர் களும் வளரவேண்டும் என்று விரும்புவார்கள்? குறைவிலாக் குணக்குன்று இறைவன் என்பது இதனுலும் விளங்குகிறதன்றே! மேலும் மண்ணுலகில் வாழும் சதாசிவ சிந்தனையுடைய ஞானியர்கள் இறைவன் செய்யும் ஐந்தொழில்களையும் செய்ய வல்லவர்கள். திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணுக்கியதும், திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசரை உயிர்ப்பித்ததும், சுந்தரர் முதலையுண்ட பாலகனை மீட்டு உயிர்ப்பித்து அருளியதும் இங்குச் சான்றுகளாகக் காணலாம். இங்கும் அவர்கள் செய்த செயல்கள் ஆன்மபோதத்தில் தன் முனைப்புற்றுச் செய்ய வில்லை இறையருளில் இரண்டறக் கலந்த நிலையில் பதிகரண வயப்பட்டு அருளியது என்பதை மறந்துவிடக்கூடாது. இதைத் தான் திருக்களிற்றுப்படியார் என்னும் சாத்திர நூல்,

"பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனை அன்றேவிக் கராங் கொண்ட — பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம் போல் அல்லாமை காண்"

என்று கூறுகிறது.

இத்தகு வாழ்வினையும் வளர்த்தினையும் தரும் இறைவனின் திருவடியை வணங்காத தலையையுடைய வாழ்வு பயனற்றது தானே! இதைத்தான் திருமூலரும்,

"பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கரிய தோர் பேறிழந்தாரே"

என்று அருளுகிறார்.

பண்டார சாத்திரங்கள்:

சைவ சித்தாந்த வகுப்பில் பயிலக் கூடிய சாத்திரங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்பெறும். இவற்றை 14 என்று வரையறுத்து வைத்துள்ளனர். இவற்றிற்குப் பின் வந்த சித்தாந்தக் கருத்துடைய நூல்களையும் மெய்கண்ட சாத்திரங்கள் என்று சேர்த்துக்கொள்ளக்கூடாதா? என்று பலர் கேட்கின்றனர். இவற்றை உளங்கொண்ட முன்னோர்கள், பின்னர்வந்த சாத்திரங்களைப் "பண்டார சாத்திரங்கள்" எனப் போற்றினர். இத்தகு வழக்கம் ஏற்பட்டதற்கு ஒரு வரலாறு உள்ளது. திருக்கயிலாய பரம்பரையில் வந்த ஆசாரியர்கள் வரிசையில் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் ஒருவர். இவர்களின் குருமூர்த்த ஆலயத்திற்குச் சமீபத்தில்சென்று வழிபடுப்பேறுகிடைத்ததுநமக்கு அப்பொழுது திருவருளால் ஓர் உண்மை புலப்பட்டது. சீகாழிச் சிற்றம்பல நாடிகள் காலத்தில்தான், ஆசாரியரைப் "பண்டாரம்" என்னும் சொல்லால் போற்றும் வழக்கம் ஏற்பட்டுள்ளது "பண்டாரம்" என்னும் சொல், ஞானக்கருவூலம் என்னும் பொருளையுடையது. ஞானக் கருவூலமாக விளங்கும் ஆசாரியர்களைப் பண்டாரம் என்னும் சொல்லால் போற்றியதனால் அவர்களால் அருளப்பெற்ற நூல்களைப் "பண்டார சாத்திரங்கள்" என்று வழங்கும் வழக்கம் இவர்கள் காலத்திற்குப் பிறகு ஏற்பட்டிருக்கவேண்டும் எனவே

மெய்கண்ட சாத்திரங்களுக்கு ஒப்பான நூல்களைப் "பண்டார சாத்திரங்கள்" என்னும் திருப்பெயர்சூட்டிப் போற்றியமுன்னோர் களின் பண்பு போற்றத்தக்கது. முன்னையதன் சிறப்பையும் மாற்றுமல், பின்னையதையும் குறைக்காமல் சிந்தித்து இனம் கண்டு ஏற்றிப்போற்றுதல்தான் சான்றோர்களின் பண்பாட்டு உள்ளம்.

சித்தாந்தக் கலாநிதி :

இக்கல்லூரியில், இவ்வாண்டு முதல், இரண்டாம் ஆண்டு தேர்ச்சிபெற்றோர், மேலும் சித்தாந்த சாத்திர நூல்களின் கருத்துக்களைத் திட்பநுட்பத்துடன் கற்றுத் தெளியவும், தெளிந்த வண்ணம் வாழவும், தூண்டும் வகையில், 'சித்தாந்தக்கலாநிதி" என்னும் பட்டவகுப்பு, மூன்ருவது நான்காவது ஆண்டு வகுப் புக்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பயிற்சியாளர்கள் பலரும் இவ்வகுப்பில் பயில முன்வந்திருப்பது மகிழ்ச்சியைத்தருகிறது. "கலாநிதி" என்ற சொல்லுக்குப் பொருள், கலைகளின் நிதியம் என்பதாகும். இப்பட்டம் பெற்றவர் கலைகளுக்கு நிதியமாக இருப்பவர் என்பது பொருளாகும். சித்தாந்தக் கலாநிதி பட்டம் பெறுவோர், சித்தாந்தக் கலையை நன்கு கற்றுத் தேர்ந்து தெளிதலாகிய கலைஞானம் பெறவும் தெளிந்த வண்ணம் சிந்தித்து வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுதலாகிய மெய் ஞானம் பெறவும் இவ்வகுப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதற்குத் துணை ஆகும் வகையில் பாடத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது, பயின்று பயன்பெறுவீர்களாக.

வாழ்த்து :

இதுகாறும் இக்கல்லூரியில் பயின்று சான்றிதழ் பெற்று உள்ளவர்களும், இனித்தொடர்ந்து பயின்று பட்டம் பெற இருப்பவர்களும் இக்கல்லூரியில் பயிற்றுவிக்கும் பேராசிரியர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழவும், இத்தகு கல்லூரியை மக்கள் நன்கு போற்றிப் பயன் கொள்ளவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

" நாத்திகம் பேசி நாத்தழும் பேறுதீர்
சாத்திரம் கற்றுச் சமயம் தெளிவீர்! "

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
சிக்கல் ஸ்ரீசிங்காரவேலவர் திருக்கோயிலுக்கு
எழுந்தருளி வழிபாடாற்றியபோது

வாசித்தளித்த

# வரவேற்புக் கவிதை

(14—6—89)

பழுத்த தமிழ்ப் புலமைநிறை முனிவ! போற்றி!
பாசமதை நீக்குகின்ற பரனே! போற்றி!
வழுத்துமடி யார்க்கருள்செய் வள்ளால்! போற்றி!
வான்மரபு காக்கும்முனி! போற்றி! போற்றி!
செழித்தசிவ நெறிவளர்க்கும் செம்மல்! போற்றி!
சீலமிகும் எம் தலைவ! போற்றி! போற்றி!
கொழித்த தமிழ்ப்பாமாலை சூட்டுகின்றேன்
கோதறவே எமக்காசி அருள்க! போற்றி.

அருள் பழுத்த தவச்சுடரே! வள்ளுவன்றன்
அறவழியில் செல்கின்ற புனித வாழ்வே!
திருமூலர் வழிநின்று தலங்கள் தோறும்
சிவசிவயென் றொலிகண்டு அன்னதானம்
திருத்தலங்கள் பலவிடத்தும் சிறக்கச்செய்து
சீர்பெருக்கிச் சிக்கல்நகர் பொலியத் தோன்றும்
பெருவாழ்வே! தருமைவளர் குருவே! நும்சீர்
பேசிட்டால் நாவினிக்கும்! பெருமை சேரும்!

தலைவணங்கிப் பணிகின்றோம்! தவத்தின் மிக்கீர்
தமிழுக்கே பொற்காலம் என்று சொல்லும்
நிலைவைத்து, திருமுறைகள் யாவும் தந்து
நெஞ்சத்தில் சைவத்தை யேற்றி வைத்து
மலையெனவே உயர்ந்திட்ட மாதவத்தோய்!
மாமணியே! வீசிவரும் தென்றற்காற்றே!
அலைபாயும் உள்ளத்தில் உம்மை வைத்தே
அஞ்சலிகள் செய்கின்றோம்! போற்றி! போற்றி!

(வேறு)

திருநின்ற நிதியே! நிதிதந்த பதியே!
பதிமுந்து புகழே! பரஞானி!
அருள்தந்த கனியே! முனிபுங்க மணியே!
மணிதந்த ஒளியே! மகதேவா!

அளிகின்ற கனியே! கனிகின்ற சுவையே
சுவைவென்ற அமுதே! சுபவாழ்வே!
ஒளிநின்ற நிதியே! நிதிதந்த சுடரே!
சுடருந்து வெளியே! சுகதாதா!
உரைவென்ற கவியே! கவிநின்ற புகழே!
புகழ்விஞ்சு பதியே! புனிதாவோ!
கரைகண்ட அறிவே! அறிகின்ற அருளே!
அருள்தந்த முனியே! அதிமேதா!
மெய்கண்ட முதலே! முதல்நின்ற துறவே
துறவுந்து பொலிவே! தூலை நாவே!
மெய்விண்ட புலமே! புலமுந்து தெளிவே!
தெளிநின்ற சிவமே! சிவஞானி!
தண்கொண்ட மழையே! மழைகண்ட கொடையே!
கொடை தந்த புகழே! குருமூர்த்தி!
கண்கண்ட நலமே! நலமொன்று முளமே
உளநின்ற நிறைவே! உபகாரி.

(வேறு)

எண்ணிற் பொலிபல் புலவர் குழாத்
திடையே பொலியும் எழிலேறே!
இதயங் களிக்க எமக்கென்றும்
இன்பம் பயக்கும் வாழ்முதலே!
மண்ணிற் பொலிநற் கயிலாய
மரபின் வருநல் மாமணியே!
மருவுப் தூய முனிவர் குழாம்
மதிக்கும் ஞானவாரிதியே!
கண்ணிற் செந்த மிழ்வளரக்
கருணை பொழியும் மாமழையே!
கருத்திற் குறித்த பொருளறிந்து
கசிந்து கொடுக்குப் கற்பகமே!
அண்ணித் தெழுந்த ஆரமுதே!
அழகார் தருமைத் திருமடத்தின்
அதிப! கயிலைத் திருமரபின்
அறிவே! வாழி பல்லாண்டே.

— சிக்கல் திரு. சி. ஜானகிராமன்.

# தேவாரம் - சொல்வழக்கு

'மூவர் முதலிகள்' எனக் குறிப்பிடப்பெறும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிய திருப்பாடல்களைத் தேவாரம் என்று குறிப்பிடுவர். தேவாரம் என்ற தொடரைத் தேவ+ஆரம் எனப் பிரித்து இறைவனுக்கு மாலையாக அமைந்தது என்றும், தே+வாரம் எனப் பிரித்துத் தெய்வத்தினிடத்து அன்பைவிளைவிப்பது என்றும் இருவகையாகப் பொருளுரைப்பர்

கி. பி. பதினோராம் நூற்றுண்டுக்குப்பின் ''தேவாரம்'' என்ற சொல் 'வழிபாடு' என்னும் பொருளில் வழங்கியதென்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள. அதற்கு முன்பு அச்சொல் அப்பொருளில் ஆளப்பட்டுள்ளமைக்கு இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் எதுவும் இல்லை. கி. பி. 14 ஆம் நூற்றுண்டில்தான் மூவர் திருப்பதிகங்களைத் தேவாரம் என்ற சொல்லால் குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது. அதற்கு முன்னர் மூவர் திருப்பதிகங்களைத் தேவாரம் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டதற்குச் சான்றுகள் இல்லை. கி. பி 14 ஆம் நூற்றுண்டில் மல்லிநாத சம்புவராயன் காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களான இரட்டையரே மூவர் திருப்பதிகங்களைத் தேவாரம் என்ற சொல்லால் முதன் முதலில் குறிப்பிட்டுள்ளனர்.

'மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்'

என வருதல் காண்க. இவர்களுக்குப் பின்னர் வந்த சைவஎல்லப்ப நாவலர் தாம் பாடிய திருவருணைக் கலம்பகத்தில்,

'' வாய்மை வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றுள் எம் உயிர்த்துணையே''

என்று பாடியுள்ளது அறியத்தக்கது. ஆயினும் கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சாரங்கதேவர் என்னும் வடநாட்டு இசை நூலாசிரியர் மூவர் திருப்பதிகங்களில் காணும் தமிழ்ப்பண்களைத் 'தேவார வர்த்தநி' என்று தனது சங்கீத ரத்நகரம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளதால் மூவர் திருப்பதிகங்களைத் தேவாரம் என்ற சொல்லால் குறிப்பிடும் வழக்கம் கி. பி. 13-ஆம் நூற்றுண்டுக்கு முன்னரே எழுந்தது என்பர் அறிஞர்.

— சைவ சமயம், வரலாற்றுப் பார்வை (அறிமுகம்)
(தொகுப்பாசிரியர்; டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன்)

# திருக்கைக்கோட்டி

வித்துவான் திரு. தா. குருசாமி
மதுரை.

**முன்னுரை :**

திருமுறைகள் வைத்துப் பூசிக்கப்பட்ட கோயில் மண்டபம் 'திருக்கைக் கோட்டி' எனக் கல்வெட்டில் வழங்கப்படுகிறது. சீகாழியிலுள்ள திருஞானசம்பந்த மூர்த்தியின் கோயில் கர்ப்பக் கிருகத்தின் தென்புறத்தில் உள்ள விவரமான கல்வெட்டு இப்பொழுதும் படிக்கும் தகுதியில் உள்ளது.

**கல்வெட்டுச் செய்தி :**

மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டு இது. இக்கல்வெட்டில் சீகாழிக் கோயிலில் உள்ள திருக்கைக் கோட்டியில் தேவாரத் திருமுறைகள் வைத்து வழிபாடு செய்யப் பெற்றன. அவ் ஏடுகள் பழுதுபட்டபோது அவற்றைப் புதுக்குதற்கு ஒரு தமிழ் விரகர் இருந்தார். ஊர்ச்சபையார் வழிபாட்டிற்கும், பிற வற்றிற்கும் இறையிலி நிலம் அளித்துப் போற்றிவந்தனர் என்ற செய்தி முழுமையாகச் சீகாழிக் கல்வெட்டில் காணப்படுகிறது.

**சிலகல்வெட்டுத் தொடர்கள் :**

" திருபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ஆறுவது திருக்கழுமலம் கற்கட நாயிற்று முதல் கிராம காரியஞ் செய்கின்ற பெருமக்களோம் ஆளுடைய பிள்ளையார்த் திருமாளிகைத் தமிழ் விரகர் கண்டு இக்கோயில் திருக்கைக் கோட்டியில் எழுந்தருளியிருக்கிற திருமுறைகள் திருக் காப்பு நீக்கி அழிவுள்ளன எழுந்தருளுவிக்கவும், திருமுறைகள் எழுந்தருளிவித்தும், திருமுறை பூசித்தும் இருக்கைக்கு...சந்திராதித்த வரை காசு கொள்ளா இறையிலியாகவும், சில்வரி பெருவரி வெட்டி கொள்ளாதேமாகவும் சொன்னோம்; கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க" என்ற கல்வெட்டுத்தொடர் அரிய செய்தியை அறிவிக்கின்றன.

**பிற கல்வெட்டுகள் :**

திருக்காருயில் கல்வெட்டு அவ்வூர் ஆலயத்தின் திருக்கைக் கோட்டியில் திருப்பதிகம் ஓதுவார்க்கு உணவளிக்க நிலம் விடப் பட்டதை உணர்த்துகிறது. (Dns 454 of 1908) திருவீழி மிழலையில்

நரசிங்க தேவனால் திருக்கைக் கோட்டி மண்டபம் கட்டப் பெற்றது என்று மற்றொரு கல்வெட்டுக் ( 414 of 1908 ) கூறுகிறது. திருவுசாத்தானம் கோயிலில் திருக்கைக் கோட்டி ஓதுவார்க்கு இராஜகம்பீர சோழியவரையன் நிலதானம் செய்ததாகக் கல்வெட்டு உணர்த்துகிறது. ( Ins 203 of 1908 ) 'ஆதலால் தேவாரத் திருமுறைகள் வைத்துப் பூசிக்கப் பெற்ற கோயிலில் மண்டபம் 'திருக்கைக் கோட்டி' என்று முற்காலத்தில் வழங்கப் பட்டது எனப் ‡ பண்டாரத்தார் கூறுகிறார்.

முடிவுரை :

அறநிலைய ஆணையர் பதவியில் திருமுறைச் சிந்தனையோடு கனம் உத்தண்டராம பிள்ளை, அவர்கள் ஆணையினால் எல்லாச் சிவாலயங்களிலும் 'திருமுறைக் கோயில்' அமைக்கப்பட்டு வழிபாடு கட்டாயம் ஆக்கப்பட்டது. அவர்கள் காலத்திற்குப் பிறகு ஒருசில இடங்களில் தான் அக்கோயில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாடோறும் ஆளமர்த்த பூசை முடிவில் திருமுறை எட்டுத் தொகுப் பிற்குப் பூசனை நிகழ்த்துகிறார்கள். பிறகு திருக் கோயில் வழிபாடு தவறாமல் செய்வதோடு ஆட்சிக்குப்பட்ட கோயில்களிலும் திருமுறைக் கோயில் வழிபாடு தவறாமல் நடத்தப்படுகின்றது. 'திருக்கைக் கோட்டி' என்பது திருமுறைகளை அழிய விடாமல் காப்பாற்றிப் போற்றி வழிபட்ட இடம் என்பதனை உணர்கின்ற நாம், இக்காலத்தையும் ஒத்துவைத்துப்பார்த்துச் சிந்திப்போமாக.

‡ 'கல்வெட்டுண்மை' By தி. வை. சதாசிவ பண்டாரத்தார்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswami Devasthanam Thiruvaiyaru.

I deem it a blessing to have been here. The anthovities have been very Conetious and help fnp

(Sd) R. R V. S. Peri Sastri

28—6—89.

# மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
## ( Western Philosophers )

சுவாமி வீரபாகு

## 6. மார்க்கஸ் அரேலியஸ் (Marcus Aurelius)

(தொடர்ச்சி - 2)

(கி. பி. 121–180)

( மலர் 48, இதழ் 9, பக்கம் 425 இன் தொடர்ச்சி.)

### தத்துவம் பிறக்கும் தருணம் :

தத்துவம் எப்போது பிறக்கிறது? அதற்கென ஒரு நேரம் உண்டு. நாகரிகம் நலிவுற்றுறைந்து போகும் போதும், துன்பமும் துயரமும் தொடர்ந்து வரும் போதும், ஏமாற்றமுற்று மனம் மாற்றமுறும் போதும் பூமியில் பொருளாதார, சமுதாய, அரசியல் புரட்சிகள் பொங்கித்ததும்பும் போதும், தத்துவ ஞானம் தானே அரும்பி, மலர்ந்து, பூத்துப் பிறக்கிறது. (Philosophy thrives in the sick chamber of civilizatiou) சாம்ராஜ்யங்கள் சரிந்து விழும் போதும் கூட, தத்துவ ஞானம் தானே, காளான் போல விளைந்து பெருகுவதைக் காண்கிறோம். அதனிய சாம்ராஜ்யம் (Athenian Empire) அழிவை நோக்கிச் செல்லும் போதுதான் அரிஸ்டாட்டில், எபிகியூரஸ் (Epicurus), பிளேட்டோ, ஸ்டாயிக்குகள் (Stoies) போன்ற தத்துவ வாதிகள் வித்தகர்களாக விளைந்து, மக்கள் மனங்களிலே ஆறுதலும் அமைதியும் மலரச் செய்தனர் என்பதை வரலாறுகள் வாயிலாக அறிகிறோம். நம் மார்க்கஸ் அரேலியஸ் போர்க்களத்தில் தனது கூடாரத்தில் அமர்ந்தவாறு பல அரிய தத்துவ ஞானங்களைத் தன் ஏட்டில் எழுதுவது வழக்கம். காரிருள் மிகக் கடுமையாகச் சூழ்ந்து நிறையும் போது கதிரவனை உதிப்பதைப் போல, தாழ்வுற்ற காலையில் தத்துவம் மலர்வதுண்டு. இது நாம் இயற்கையில் காணும் நியதி. காவியங்கள், பக்தி இலக்கியங்கள், விஞ்ஞானக் கோட்பாடுகள் - இவை வளமான காலத்தில் தான் இனிது பொங்கித் ததும்புவது வழக்கம்.

## ஸ்டாயிக் தத்துவ ஞானிகள் : (Stoic Philosophers)

கிரேக்க நாட்டிலே ஸ்டாயிக் தத்துவ ஞானிகள் செல்வாக்கோடு ஒரு காலத்தில இலங்கினர். ஸ்டாயிக் தத்துவநெறி சுற்றியுள்ள நாடுகளிலும் மெல்லப் படர்ந்து சென்றது. அது ரோமாபுரி சாம்ராஜ்யத்தில் தாமாகத் தத்துவ ஞானிகள் சென்று தம் அரிய போதனைகளை ஓதி வந்தனர். மார்க்கஸ் அரேலியஸ் தன் பதினெட்டாம் பிராயத்திலேயே ஸ்டாயிக் தத்துவ ஞானிகளால் ஆட்கொள்ளப்பட்டான்.

ஸ்டாயிக் தத்துவம் செமிட்டிக் ஜீனோ (Semitic Zeno) என்பவரால் பரப்பப்பட்டது. இதற்கு இணையாகச் சைவசமயத்திலிருந்து கூறவேண்டுமானால் "இருவினை ஒப்பைக்" குறிப்பிடலாம். நல்வினையானது நம்மையடைந்தாலும், தீவினை நம்மைத் தேடி வந்துற்றாலும் நாம் முணு முணுக்காது சகித்து மன அமைதியோடு இருக்க வேண்டும் என்பது ஸ்டாயிக் தத்துவத்தின் தெளிந்த சாரமாகும். ஓர் இயந்திரம் போல் பிரபஞ்சம் ஒன்றே - மானுடர் அனைவரும் ஒரு மாபெரும் குடும்பம். நாம் அதில் ஓர் அங்கம். நமக்கெல்லாம் பொதுவாக உள்ளது ஒரு சட்டம். எனவே எது நேரினும் துன்பம் வந்தாலும், இன்பம் வந்தாலும் அதனை இனிது ஏற்க வேண்டுவது நியதி - நமது கடமையுமாகும். துன்பத்தையோ இன்பத்தையோ கொடுத்து இயற்கை நம்மூலம் சமநிலை எய்தச் செய்கிறது. எனவே எதுவரினும் நாம் அதனை அமைதியாக ஏற்று அமர்ந்திருக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் ஸ்டாயிக் தத்துவம் அளவற்ற செல்வாக்கோடு அக்காலத்தில் இலங்கியது என்பது வரலாறு.

எல்லாம் கடவுளின் வடிவம் என்பது ஸ்டாயிக்குகளின் நம்பிக்கை. "கடவுள் ஒன்றே. கடவுளே ஆகாயம். கடவுளே காற்று. கடவுளே அக்கினி. கடவுளே உள்ளம். கடவுளே ஆன்மா. கடவுளே இயற்கை." (God is One. God is Ether. God is Air God is Fire. God is Mind. God is Soul God is Nature. One God' One human family; One Law) இக் கோட்பாட்டோடு மணிவாசகரின், "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க் கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே" என்ற திருப்பாடல் ஒப்பு நோக்கத் தக்கது. மனிதன் தனக்கு நேரும் துன்பங்களை இவ்வுலகில் ஆற்றிக் கொள்ள முடியாதென்றாலும், குறைந்த பட்சம் அவன் பொறுத்துக் கொண்டு அடங்கியிருக்கும் சக்தியையேனும் பெற முடியும்,

அல்லவா? (The Stoics taught that if man could not banih the sorrows and the evils of the world at least discipline his own willto endure them )

இந்த ஸ்டாயிக் தத்துவத்தை அரேலியஸ் இளமை முதல் ஏற்று, இறுதி வரை பின் பற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. "அரேலியஸின் ஆத்மசிந்தனைகள்" என்ற அவரது நூலில்பெரிதும் ஸ்டாயிக் கோட்பாடுகள் விரவி நின்று விளங்குவதைக் காணலாம்.

## நன்மையுமில்லை, தீமையுமில்லை :

உலகில் மக்கள் சிலவற்றை நல்லது என்றும், மற்றும் சிலவற்றைத் தீயதென்றும் மதிக்கின்றனர். ஆனால் நன்மை என்றும் தீமை என்றும் நம் மனம் தான் எண்ணுகிறது. மற்றும் உலகில் சிலருக்கு நன்மையாக இருப்பது வேறு சிலருக்குத் தீமையாகத் தென்படுகிறது. மாங்கனி பொதுவாகச் சுவை மிக்க நற்பொருள் என்ற போதிலும் நீரிழிவு நோயாளி ஒருவனுக்கு அது தீமையாகத் தோன்றுகிறது. எக்கும் ஒரு பொருள் மற்றவருக்குக் கசப்புப் பொருளாகத் தோன்றிய போது, மருத்துவன் ஒருவனுக்கு அது மகத்தான ஒன்றாகத் தோன்றுகிறது. எனவே மண்ணில் நன்மை நன்மை தீமைகள் மனத்தளவினதாகவே இருக்கின்றன. எனவே ஒரு பொருளை நன்மை என நாடாமலும் மற்றொரு பொருளைத் தீமை என்று சாடாமலும் இருக்க வேண்டும் என்பது ஸ்டாயிக் போதனை ஆகும்.

## கருணையுள்ளம் கொண்ட காவலன் – காதலன் :

அவிடியஸ் கேஸியஸ் ( Avidius Cassius ) என்பவன் அரேலியஸியன் தளபதிகளில் ஒருவன். அவன் தானேசக்ரவர்த்தியாக முயற்சித்துச் சதியில் இறங்கினான் அவனுக்கு இப்படி ஒரு துணிவு எப்படி வந்தது? அரேபியாவிலும் எகிப்திலும் எழுந்த புரட்சிகளை அவன் அடக்க வாய்த்தது அத்துணிவால் தானே மாமன்னன் ஆக முயன்றான். ஒருஜூலியஸ் சீஸருக்கு ஒரு சதிகார புருட்டஸ் தோன்றினாற்போல அவிடியஸ் அரேலியஸுக்கு எதிராக எழுந்தான்: "இஃது ஒரு வதந்தி. அவிடியஸ் அப்படிப்பட்டவன் அல்லன்" எனச் சொல்லி அரேலியஸ் சும்மா இருந்து விட்டான். ஆனால் ஆசை மிக்க அவிடியஸ் சக்கரவர்த்தியின் மாபெரும் நாட்டைக் கைப்பற்ற மட்டும் கருதவில்லை. மாமன்னனின் மனைவியையும் அடைய முயன்றான். அரேலியஸ் இறந்து விட்டான் எனப் புரளியைக் கிளப்பி விட்டு எகிப்து நாட்டுப் பிரதிநிதிகளையும்

தன்னுடன் சேர்த்துக் கொண்டான். அரேலியஸ் தன் அரிய படை வீரர்கள்பால் ஓர் உணர்ச்சி மிக்க உரை ஆற்றினன். ஆவேசம் மிக்க ஒரு படை வீரன், தானே புறப்பட்டுப் போய் அந்தப் புரட்சிக்காரனைக் கொன்று வீழ்த்தினன். ஆனல் அரேலியஸ் புரட்சிக்காரர் அனைவரையும் மன்னித்தான். அவிடியஸ் குடும்பத்தாருக்கு ஆதரவு தந்து காத்தான். அத்தனை அருள் உள்ளம் கொண்டவன் அரேலியஸ்.

அரேலியஸ் புரட்சி நிகழ்ந்த நகரங்கட்கு எல்லாம் சென்ருன். தன் மனைவியையும் புதல்வன் கம்மோடஸையும் (Commodus) உடன் அழைத்துச் சென்ருன். மன்னிக்கத்தான் தான் வந்துள்ளதாகவும் மற்றவர்களைப் பழிவாங்க அல்ல என்ற செய்தியை அறிவித்தான் - அமைதி காக்கப்பட்டது. ஆனல் சென்ற இடத்தில் இவன் அருமை மனைவி நோய்வாய்ப்பட்டுச் செத்துப்போனுள். அவன் மனைவி ஃபாஸ்டினு (Faustina) போல் பொன்னுல் ஒரு சிலை செய்து தான் போகுமிடமெல்லாம் அதனை அரேலியஸ், தன் அன்பு மனைவியாட்டிமேல் கொண்ட காதலை வெளிப்படுத்தத் தன்னுடன் எடுத்துச் சென்ருன். மார்க்கஸ் அரேலியஸ் ஒரு கருணை உள்ளம் கொண்ட காவலன் மட்டும் அல்ல - கருணை உள்ளம் கொண்ட காதலனுகவும் திகழ்ந்தான்.

### மேலும் சில மேலான போதனைகள் :

அரேலியஸ் அளித்த போதனைகளில் மேலும் சிலவற்றைச் சிந்திப்போம். "நான் என் சகோதரர்கள்பால் சினம்கொள்ளல் கூடாது. அடுத்து அவர்கள் தொடர்பை அறுத்துக் கொளளவும் கூடாது ஏன் தெரியுமா? இயல்பாக நாம் ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொள்ளத்தான் உய்வுகொண்டோம். இரண்டு பாதங்கள் போல, கண்ணிமைகள் போல், மேல் வரிசைப் பற்கள் போல நாம் ஒருவருக்கு ஒருவர் ஒத்துப்போய் இயங்கவேண்டுவது நமது கடமையாகும்."

"வாழ்வில் இயன்ற அளவு சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள். ஏனெனில் நாளை நீ வாழுங்கால் மேலும் மேலும் துன்பங்கள் வரக்கூடும்" நாளையே கூட உன் வாழ்வு நடை அற்றுப் போகக்கூடும். அந்த அறிவோடு, ஒவ்வொரு செயலையும் செய்; ஒவ்வொரு வாசகத்தையும் பேசு; ஒவ்வொரு எண்ணத்தையும் சிந்தி!

"வாழ்க்கையே ஒர் அரிய போராட்டம்" ஒரு புதிய வழியிலே - நாம் அறியாத வழியிலே மேற்கொள்ளும் ஒருயாத்திரை போன்றது இவ்வாழ்வு.

"இவ்வுலகம் நல்லதே ஆகும். ஏனெனில் இஃது இயற்கைச் சட்டத்தின் படியே இயங்குகிறது. அதற்குத் தலைவணங்கி நடப்பதே தன்மை ஆகும் - நன்மை ஆகும்.

"எல்லாம் விதித்தபடி தான் நடைபெறும். எனவே அதைப் பொருட்படுத்தாதே! அதை அலட்சியம் செய்யப் பயில்வாயாக! முடிவில், எவராயினும், அதற்கு ஆட்பட்டுத்தான் ஆகவேண்டும்: மேலோராயினும், கீழோராயினும் நாம் அனைவரும், தவிர்க்க முடியாத பாரபட்சம் அற்ற விதியின் கரத்திலே ஒன்றும் இயலாத ஒரு வெறும் பொம்மையாகப் போய்விடுவோம்." "மெய்ப்பொருளுக்கேற்ப அனுசரிப்போம். இயற்கைச்சட்டங்களின்படி இருந்து வாழ்வோம்!"

"எல்லா நிகழ்ச்சிகளையும் சமத்துவப் பார்வை கொண்டு ஏற்போம். நாம் அனைவரும் ஒருநிகர்சமானமாவோம்."

"ஸ்டாயித்தத்துவம் ஒரு ஜனநாயக போதனை, அதன் பார்வையில் எல்லாரும் சமநிலையிலேதான் காணப்படுகிறோம்."

1850 ஆண்டுகட்குமுன் வாழ்ந்த அரேலியஸ் ஒவ்வொரு ரோமானியராலும் நேசிக்கப்பட்டான். கிரேக்கக் கடவுளரின் சிலைகளை வீடுகளில் வைத்திருப்பதுபோல் அரேலியனின் மார்பளவு பிரதிமை ஒவ்வொரு வீட்டிலும் அலங்கரித்துக்கொண்டிருந்தது. அவன் ரோமானிய மாமன்னருள் மிகச் சிறந்தவன். மார்க்கஸ் அரேலியஸ் இறந்து விண்ணுலகம் எய்தும்போது ஒலிம்பிக் கடவுளர்கள் ஒன்றுகூடி அவனை வரவேற்றனர். அவனைப் பெருமைப்படுத்த அவர்கள் ஓர் அரிய விருந்து அளித்தனர் என அரேலியஸின் வரலாற்று ஆசிரியர்கள் வாழ்த்திப் போற்றுகின்றனர்.

ஆதார நூல்கள் :

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophersby Thomos & Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

# ஸ்ரீ இடபாரூடமூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தியான சுலோகம்

ஸவ்யே ஸ்யாத் வக்ர தண்டாசந்வித கடககரம்
கோபதே ; ப்பிருஷ்ட ஸம்ஸ்தம்
வாமஸ்யார்த்தம் ஸதக்ஷம் வராபயகனே
டங்கக் கிருஷ்ணம் ததாநம்।
பாலஸ்தாக்ஷம் பிரசந்நம் திரிநயநஸஹிதம்
பத்தவேணீ கிரீடம்
வாமே கௌர்யாஸமேதம நமத சுபகரம்
தம் வ்ருஷாரூடமீசம்.

பொழிப்புரை : வளைந்த கோலுடன் கூடிய வலது கடககரத்தோடும். வரதஹஸ்தத்தோடும், மான், மழு ஏந்திய கைகளோடும் நெற்றிக் கண்ணோடும் எப்பொழுதும் திருவருள் புரியும் நோக்கத்தோடும், ஜடாமகுடத்தோடும், இடது பாகத்தில் பார்வதியோடும் கூடி விடைமேல் அமர்ந்திருக்கின்ற ஸ்ரீ இடபாரூட மூர்த்தியை நீங்கள் எல்லோரும் வணங்குவீர்களாக.

விளக்கம் : சிவபெருமானுக்குரிய வாகனமும், கொடியும் இடபமாகும். 'ஊர்தி வால் வெள்ளேறே சிறந்த சீர்கெழுகொடியும் அவ்வேறு என்ப' என்பது புறநானூறு. அறக் கடவுளே விடையாக இருந்து இறைவனைத் தாங்கி வருகிறது என்பது மரபு. ஒரு சமயம் தேவர்களின் வேண்டுகோட்படி திரிபுரத்தசுரர்களை அழிக்கச் சிவபெருமான் மேருவில்லை ஏந்தி, தேவர் படைத்த தேர்மீது ஏறிப் புறப்பட்டார். தேரின் அச்சு முரிந்தது. திருமால் வெள்விடையாக உருவெடுத்துச் சிவபெருமானைத் தாங்கினார். அவர் என்னையன்றி எம்பெருமானைத் தாங்கிச் சுமப்போர் யாவருளர், என்று சிறிது இறுமாப்பு அடைந்தார். இறைவன் திருமாலின் செருக்கை அகற்றத் திருவுளம் கொண்டார். அடுத்தகணம் சிவபிரானைச் சுமக்க மாட்டாது விடை வடிவெடுத்த திருமால் செவி, வாய், மூக்கு வழியாக உதிரம் பெருகநிலத்தில் வீழ்ந்தார். தன் பிழை பொறுக்க வேண்டினார். தன்னையும் அறவிடையோடு மால் விடையாக

ஏற்றருளக் கேட்டுக் கொண்டார். இறைவன் திருமால் வேண்டுகோளை ஏற்று அருள் புரிந்து அவரைத் தன் வெள்விடையாக ஏற்று அதன் மீது அமர்ந்து அருள்புரிந்தார்.

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

" தோடுடைய செவி யன்விடையேறி யோர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே "

— திருஞானசம்பந்தர்.

" மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்துபூதப் படை சூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

— சுந்தரர்.

### திருச்சிற்றம்பலம்

---

## பார்வையாளர் குறிப்பு (நகல்)

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

### வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானம்

வைத்திசுவரன்கோயில்

இப்புனித ஆலயத்திற்கு வழிபடவந்தோம். மக்கள் வருகை வளர்ந்து கொண்டே போகவும், இறையருள் எல்லோருக்கும் தொடர்ந்து கிடைத்திடவும் வேண்டுகின்றேன். ஆலய வழிபாட்டிற்கு வந்து செல்லும் மக்களை, இவ்வாலய நிர்வாகத்தினர் சிறப்புடன் - அன்புடன் உபசரிக்கும் முறை வரவேற்கத்தக்கது.

போற்றுவோம் வைத்தீஸ்வரநாதனை.

(ஒ-ம்) பெ. காளிமுத்து I. P. S.
D. I. G. கோயம்புத்தூர்.

# போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

இறைவன் அருள்வடிவமாக விளங்குகின்றான் என்றும் அவன் உலகரில் ஒருவன் அல்லன் என்றும் தேவரில் ஒருவன் அல்லன் என்றும் இதுவரை சிந்திக்கப் பெற்றன.

இனி, அவ் இறைவன் உருவத்திருமேனி கொள்ளுதற்குரிய காரணங்களைக் காணலாம். அவன் போகியாய் இருந்து உயிர்களுக்குப் போகத்தையும் யோகியாய் இருந்து யோக முத்தியினையும் தருதலோடு, வேகம் கொண்டவன் போலிருந்து வினையினைக் கெடுத்தலையும் செய்கின்றான்; இதனைப் பலரும் அறியாது தடுமாறுகின்றனர் என்று ஒரு பாடலில் அருள்நந்தி சிவாசாரியர் உருவத்திருமேனிக்குக் காரணம் கூறுகின்றார்.

> '' போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
> யோகியாய் இருந்து முத்தி உதவுதல் அதுவும் ஓரார்,
> வேகியானல் போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்,
> ஊகியா மூடரெல்லாம் உம்பரில் ஒருவன் என்பார் ''

என்பது அக்கருத்தமைந்த பாடல். இதில், தேவர்களில் ஒருவன் இறைவன் என்று கூறுவோரைக் கடுமையாக மறுத்துக்கூறுகின்றார் ஆசிரியர். எனினும், மறைமுகமாக இறைவன் போகியாய் இருப்பதற்கும் யோகியாய் இருப்பதற்கும் வேகங் கொண்ட வடிவம் கொள்ளுதற்கும் உரிய காரணங்களையும் ஊடே கூறியுள்ளார் என அறியலாம். அவனே எல்லா வடிவமாய் இருந்து செயல் படுகின்றான் என்பதோடு அவன் வடிவங் கொள்ளுதற்குக் காரணம் என்ன என்பதையும் விளக்கியுள்ளார். போகியாய் இருக்கும் வடிவம் உமா மகேசுவர மூர்த்தம் ஆகும். யோகியாய் இருப்பது தட்சிணாமூர்த்தி வடிவம். வேகியாய் இருப்பது காமாரி வடிவம். இவை இறைவனது தடத்த வடிவங்களுள் ஒன்றாகிய மாகேசுவர வடிவ பேதங்களாம்.

இங்கு இன்னொன்றையும் சிந்திக்க வேண்டுவது இன்றியமையாதது. திருவிழாநாட்களில் ஏழாம் திருநாள் திருக்கல்யாண உற்சவம் ஆண்டுதோறும் நடைபெறுவது மரபு. பலர் ஆண்டுதோறும் இறைவனுக்குத் திருமணமா? என்று அறியாது வினவுகின்றனர். இறைவனைத்திருக்கல்யாண கோலத்தில் நாம்காண்பது நாம் நலம் பெறுதல் பொருட்டே தவிர வேறில்லை. இறைவன் உமாமகேசுவர கோலத்தில் போகியாய் இருப்பது, உயிர்கள் போகம் பெறுதல் பொருட்டே ஆகும். இதனை இந்தப் பாடல் தெளிவுறுத்துகின்றது பாடம் நடத்தும் ஆசிரியர், கையில் சுண்ணக்கட்டி வைத்துக் கரும்பலகையில் 'அ' எழுதுவது கற்றுக் கொடுக்கவே தவிரக்கற்றுக் கொள்ள அல்ல அதுபோல இறைவன் திருமணக் கோலத்தில் இருப்பதற்குக் காரணம் உயிர்களுக்குப் போகத்தைத் தருதல் பொருட்டே தவிர அவருக்காக அல்ல. இதுவே யோகியாய் இருப்பதற்கும் பொருந்தும். இந்தப்பாடலில், போகியாயும் யோகியாயும் இறைவன் இருக்கின்றான் என்று கூறியவர், அவன் வேகியாய் (வேகங்கொண்டவன்) இருக்கின்றான் என்று கூறுதல், "வேகியானால் போல்" என்று கூறியுள்ள நுட்பம் சிந்திக்கத்தக்கது. இறைவன் திருக்கரங்களில் கடுமையான ஆயுதங்களைக் கொண்டு காட்சி தருதல் வேக வடிவம் என்று கொள்ளக் கூடாது; வேக வடிவம் கொண்டது போன்று நின்று உயிர்களின் வினையினை நீக்குகின்றான் என்று ஆசிரியர் அருளியுள்ள கருத்துக் சிந்தித்துப் போற்றத்தக்கது.

போகியாயும் யோகியாயும் இருந்தருளுவது அறக்கருணை என்றும் வேகியானால் போல் இருப்பது மறக்கருணை என்றும் கொள்ளுதல் வேண்டும். கருணை உடைய கடவுளுக்கு ஆயுதங்கள் எதற்கு? என்று கேட்கின்றனர். அன்போடு பாடம் நடத்தும் ஆசிரியர் கையில் பிரம்பு எதற்கு? என்று கேட்டால் இதற்கு விடை புலனாகும். எனவே அன்பு என்பது, உதவுவதற்கு மட்டும் இல்லை; சில நேரங்களில் கண்டித்தலுக்கும் அதுவே காரணமாக அமையும். இதனால் தான், திருவள்ளுவர்,

"அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அதுவே துணை"

என்றார். இறைவனின் உருவத் திருமேனி குறித்த நற்சிந்தனைகளை இப்பாடல் இவ்வண்ணம் விளக்குகிறது.

அடுத்த பாடலில், இறைவன் மாயைக்கு அப்பாற்பட்டவன் என்பதையும் இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்டு நிற்கின்றான் என்பதையும் விளக்குகிறார். மேற்குறித்த பாடலில் அவன் மூன்று வடிவங்களையும் எடுத்தருளுகின்றான் என்று கூறியவர், அவ்

வடிவங்கள் மூன்றும் ஒன்றை ஒன்று ஒவ்வா வடிவங்கள் என்பதை இங்குக் கூறி, ஒருவனே மூன்று வெவ்வேறு வடிவங்களைக் கொள்ளுதல் சாத்தியமன்று ஆதலின் அங்ஙனம் வடிவங்கொள்வோன் உலகிற்கு அப்பாற் பட்டவனாய் இருக்க வேண்டும் என்றும் கூறி விளக்குகின்றார். இவையனைத்தும் இறைவனின் அருள் வெளிப்பாடே என்றும் நிறைவாக ஆசிரியர் தருகின்றார்.

> "ஒன்றோடு ஒன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு
> நின்றவால் உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார்
> அன்றிஅவ்வேடம் எல்லாம் அருள்புரி தொழில் என்றுஓரார்
> கொன்றது வினையைக் கொன்று நின்ற அக்குணம் என்று
> ஓரார்"

என்னும் பாடல் அக்கருத்துக்களை விளக்குகிறது

(தொடரும்)

---

## கடிதம்

பேராசிரியர் டாக்டர். 1/44 தியாகராசர் காலனி,
க, சுவர்ணகாளிஸ்வரன், பி. லிட்., திருவையாறு,
2—8—89.

தங்களது அருளுபதேசத்தில் பொய்யடிமை இல்லாத புலவர் குறித்த செய்திகளை விளக்கிய திறத்தைக் கட்டுரை மூலம் கண்டு நேரில் வரவாய்ப்பில்லையே என்று எண்ணினேன். சிதம்பரம் சென்று வழிபடும் பொழுதெல்லாம் எனக்கு இரண்டு ஐயங்கள் தோன்றிக் கொண்டேஇருந்தன. ஒன்று நவக்கிரகலிங்கம் இரண்டு பிரமச் சண்டர் பற்றியதாகும். பின்பு சிவபூஜாபத்கதிகளை நோக்கிக் கொண்டு வந்தபோது அது ஆதிச்சண்டர் வடிவம் என அறிந்தேன். அவ்வாறே தாராசுரத்திலும் இருப்பதைக் கண்டேன். நவக்கிரக இலிங்கம் குறித்துத்தான் பலரிடம் கேட்டும் என் உள்ளத்திற்கு நிறைவான பதில் இல்லை

தங்களுபதேசத்தால் தொகையடியார் ஒன்பது வகையினருக்கும் ஒன்பது இலிங்கங்கள் அமைந்திட்ட சிறப்பினையும், பலராதலால் தனி உருவம் அமைப்பது பொருந்தாது எனக் கருதி ஒவ்வொரு தொகுதியினருக்கும் ஒன்பது இலிங்கம் அமைத்துள்ளனர். இவ்வாறு பாண்டி நாயகத்தின் முன்னர் அமைந்திருப்பது தொகையடியார் கோயிலே. தில்லைக் கோயில் கல்வெட்டு மெய்ப்பிக்கின்றது என்ற செய்தி என்னுடைய நீண்ட நாள் ஐயத்தினைப் போக்கியது.

இத்தகைய அருளுபதேசம் செய்யும் கருணை பொருந்திய குருமகாசந்நிதானத்தின் திருவடியைப் போற்றுவதன்றிக் வேறொன்றையும் அறிகின்றிலேன்.

# மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

**வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,**
தருமபுரம்.

(மலர் 48, இதழ் 8, பக்கம் 429 இன் தொடர்ச்சி.)

## பெண்மையின் பெருவெற்றி !

காந்தர்வதத்தை பேரழகி. பூவுலகில் அவள் மணவினை நிறைவேறும் - என்ற விதியினால், சீதத்தன் என்ற வணிகன்பால், வித்யாதரவேந்தன் அவளை ஒப்புவிக்கின்றான். அமிர்தம் பெய்த செப்பெனச் செறிந்த திரண்ட முலையினாளைப் பெண்களே விரும்பினர். அவளைக் கூடுவதற்காக அவர்கள் ஆண்மையை வரமெனப் பெறவும் தயங்கவில்லையாம் என்று தேவர் காட்டுகிறார்.

> பெண்டிரும் ஆண்மைவெஃகிப் பேதுறு முலையினாளைக்
> கண்டவர் மருள நாளைக் கடிவினை முடித்துமென்றான் (.சிந்.587.)

கம்பர் இதனை அப்படியே ஆண்மையின் வெற்றியாக்கிக் காட்டினார், இராமனின் ஈடுஇணையற்ற அழகு ஆடவரையும் கலங்கச் செய்தது, தோள் கண்டவரும் – தாள் கண்டவரும் பிற உறுப்புகளைப் பார்க்கக் கண்களை அங்கிருந்து பெயர்க்கமுடியாமல் தவித்தனர். இந்த அழகனை அனுபவிக்க - நாம் பெண்ணாகத்தான் பிறந்தோமா என்று ஏங்கிநின்றனர்.

> ஆடவரும் பெண்மையை அவாவும் தோளினான். (கம். 362,)

அவரே சிந்தாமணிக் கருத்தில் இணைந்தும் சீதையின் பொலிவினை வருணிக்கத்தவறவில்லை. சீதையின் ஒப்பற்ற அழகில் சூர்ப்பணகை மயங்கிப்போனாள். அவள் மனம் படாதபாடுபட்டது. இவளைக் கண்டு பெண்ணாகிய எனக்கே பேரார்வம் ததும்புகிறதே; மற்றவர்களைப்பற்றி (ஆண்களை) நினைக்கவும் கூடுமோ என்று அங்கலாய்க்கிறாள்.

> எண்பிறங்கு அழகிற்கு எல்லையில்லையாம் என்றுநின்றாள்
> கண்பிற பொருளில் செல்லா கருத்தெனின் அஃதேகண்ட
> பெண்பிறந் தேனுக்கு என்னால் என்படும் பிறருக்கு என்றாள்.
>
> (கம். 2791,)

மூத்தவளும் இளையவளும் :

திருமகளும் அவள் தமக்கையும் எல்லாவற்றிலும் முரண்பட்டவர்கள். ஒருத்தியிருக்கும் இடத்திற்கு மற்றவள் வரமாட்டாள். இவள் செல்வத்திற்கு அதிபதி. அவள் சோம்பேறித்தனத்துக்குச் சொந்தக்காரி. இவள் இல்லாத இடத்தினை உடனே அவள்வந்து பிடித்துக்கொள்வாள். சிந்தாமணியில் இக்கருத்து கால்கோள் கொண்டது. காந்தர்வதத்தை தேவவுலகைவிட்டு மண்ணுலகிற்குப் பயணமானாள். திருமகளை அனுப்பிவிட்ட தாமரைபோலப் பொற்கோவில் பொலிவிழந்தது. அங்கே புலம்பு (தனிமை) குடிகொண்டது. மௌனம் குடியிருந்தால் மௌட்டீகத்திற்கு (மூதேவி) மகிழ்ச்சிதானே.

திருப்புறக் கொடுத்த செம்பொற் ருமரை போன்று கோயில்
புரிகுழன் மடந்தைபோகப் புலம்பொடு மடிந்ததன்றே.

(சிந். 560.)

கம்பர், கைகேயி அலங்கோலமாய் அணிகலன்களைத் துரந்து கூந்தல் மலர் பிரித்துத் திலகமழித்துக்கிடந்த நிலையை, தன்வரத்தினால் இராமன் காடுசெல்லும்போது சீதையும் உடன்போவாள்; திருமகள் அயோத்தியைவிட்டு நீங்கிவிடுவாளென்ற திட்டத்தில் அவள் தமக்கை படுத்திருப்பதுபோல இருந்தது என்றார்,

கவ்வை கூர் தரச் சனகியாம் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்குமென் றயோத்தி வந்தடைந்த அம்மடந்தை
தவ்வையாம் எனக் கிடந்தனள் கேகயன்தனயை. (கம் 1494.)

திருத்தக்க தேவர் குறிப்பாகச் சொன்ன செய்தி - காவியப் போக்கில் தெளிவு பெறக் காட்டப் பட்டது கம்பரால் என அறிகிறோம்.

பரிவும் எரிவும் :

தரன்செய்த வித்தையால் கலுழவேகனின் நட்புக்கிடைத்தது. கலம் கவிழ்ப்பு நாடகம் கடைசியில் நல்ல பலனைத்தந்தது. கலுழவேகனின் அன்புக்குத் தான் மட்டுமல்ல தன் குலமே ஆட்படுகிறது என்று இன்னுரை கூறி, நண்பர்கள் அனைவரையும்

நன்னிலையில் கண்டு அகம் மகிழ்ந்தான். அழலால் கதுவிய புண்ணில் அருவியும் ஆரமும் (சந்தனம்) பட்டது போல் ஆறுதலடைந்தான் என்றார் தேவர்.

கட்டழற் கதிய புண்ணிற் கருவரை யருவியாரம்
பட்டது போன்று நாய்கன் பரிவு தீர்ந்து (சிந். 583.)

மகிழ்ந்தான் என்பது சிந்தாமணி.

கம்பர் இக்கருத்திற்கு எதிர்மறை முகத்தால் ஏற்றம்தருகிறார். புண்ணில் சந்தனம் பட்டால் இதமாக - எரிச்சலடங்கி இருக்கும். மாறாக எரியும் கோல், வேல் பட்டால் எப்படி? துன்பம் நூறாயிரம் மடங்காய்ப் பெருகி நிற்குமல்லவா! சீதை அசோகவனத்தில் சோகமே உருவாக அமர்ந்திருக்கிறாள். பல்வேறு நினைவுகள் துக்கத்தைத் தூண்டுவனவாக எழுகின்றன. அதனால் திறந்த புண்ணில் எரிநுழைந்து போன்ற - வருத்தம் அடைந்தாள் என்கிறார் கம்பர்.

கண்டிலன் கொலாம் இளவலும் ஐயனைகடல் நடுவண்
உண்டிலங்கை என்று உணர்ந்திலர் உலகெலாம் ஒறுப்பான்
கொண்டிறந்தமை அறிந்திலராம் எனக்குழையா
புண்திறந்ததில் எரிநுழைந்தா லெனப் புகைவாள்.(கம்.5080.)

இன்னொரு காட்சி - இராவணனுக்கும் ஒரு நெருக்கடி வந்தது. கொடுமைக்கும் ஒரு கொடுமை வந்தது போல அவன் மகன் அதிகாயன் மாண்டான். அவனுக்குத் துணைசென்றவர்களும் துறக்கம் புக்கனர் என்று தூதர் கூறவும் இராவணனுக்கு முன்னமேயே துணைவர்களை, மக்களைப் பறிகொடுத்த துயரம் பன்மடங்காகியது.

புண்ணிடை எரிபுக்கென்ன மானத்தால் புழுங்கிநையும்.
(கம். 7990.)

வெந்த புண்ணிடை வேல்பட்டன்ன வெம்மை - (கம். 9195.) இந்திரஜித்தனின் மறைவினால் உண்டாயிற்று என்று இராவணனின் அளவிலடங்காத் துன்பத்தைக் கம்பர் காட்டினார்.

முரணால் செய்த அரண் :

தேவர் சிந்தாமணியில் மிகப் பெரிய கூட்டத்தின் பெருக்கத்தைக் காட்ட 'எள்போட்டால் விழாது' என்று கூறுவார். எள்ளுப்

ஜோடவும் நிலத்தில் இடமில்லை என்னும்படி வழுமரப் பொலி ஜோடே (பழுத்தமரம்) இராசமாபுரம் விளங்கியது என்பார்.

இட்டவெண் ணிலப்படா வகையி னீண்டிய
முட்டிலா மூவறுபாடை மாக்கள். (சிந். 93.)

என் நிலப்படா வகையெனப் பிரித்தல் வேண்டும்.

இன்னெரு இடத்திலும் :

எண்ணிடமின்றி மன்னரிம்மலை யிறைகொண் டீண்டி (சிந். 538)
என்றே கூறினர். தாரிணி தத்தையைஈன்றபோது (கலுழவேகனின் மனைவி) அரசனை வாழ்த்தவந்த மன்னர் கூட்டம் இப்படியிருந்தது என்றார்.

இதே வருணனை தத்தையின் யாழ்ப் போரில் கலந்து கொள்ள வந்த விண்ணவரும் மண்ணவரும்

விண்ணு மண்ணும் விருந்து செய் தாலொப்ப
எண்ணி னெண்ணிட மின்றி நெருங்கினர். (சிந். 635.)

என்று மற்றோரிடத்திலும் இதே அமைப்புத் தொடர்ந்தது. கம்பர் தேவரின் வருணனை ஒருமங்கல மரபுக்குகந்ததாக இல்லையே என எண்ணியிருப்பார் போலும். அதனுல் மங்கலச் சடங்கிற்காக வரும் கூட்டம் 'உழுந்திட இடமின்றி' நிறைந்தது என்றார். ஜனகியின் மணங்காண வந்தவர்களை

'உழுந்திட இடமில்லை உலகம் எங்கணும்' (கம். 754.)

இப்படிக் காட்டினர்.

முரண்பாட்டிலும் - சிந்தாமணிச் கருத்தை தழுவிய உடன் பாடு இருப்பதால் - வரவேற்பிலும் ஐயமில்லை அல்லவா!

(வளரும்)

# அதிபத்தர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,

தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 2—7—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

"சைவ நெறி ஏழுலகம் பாலிக்கும் தன்மையினால் தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருவாரூர், திருவாரூர்" — என்றார் சேக்கிழார். " தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் தருமபுரம், தருமபுரம்" என்று போற்றுமாறு அல்லவா தருமை திகழ்கிறது!

ஆறுகால பூசைகளும், ஆன்மார்த்த வழிபாடும், தேவாரப் பண்ணிசையும், தேன் தமிழின் தோத்திரமும், வேதஆகமங்களின் விழுமிய ஒலியும் தருமை மண்ணின் தனிச்சிறப்பு! எங்கும் தெய்வ மணம் — இப்படிச் சிந்தித்தவாறே தருமைத் திருமடம் சென்று சேர்ந்தேன். காலை மணி 10.

நித்தலும்நியமமாகக் குருமணிகள் ஆற்றும் ஸ்ரீசொக்கநாதர் வழிபாடு நிறைந்தது. ஆதீனப் பண்டாரசு கட்டிற்கு எழுந்தருளிப் பாராயணமும் ஆயிற்று. அன்பர்கள் பத்திமை நெறியோடு பணிந்து எழுந்து திருநீறு பெற்று அணிந்து அமர்ந்தார்கள் திருமுறைப் பாராயணம், நாமாவளி ஓதியபின் அருளுபதேசம் தொடங்கிற்று.

அருள் வடிவாம் குருமணிகள், அதிபத்த நாயனார் புராண உபதேசம் செய்தருளினார்கள். அதி - என்ற சொல் மிகுதி என்ற பொருளுடையது. அதிபத்தர் - இறைவன் மாட்டு மிக்க பத்திமை சான்றவர் - இங்ஙனம் திருப்பெயர் விளக்கம் செய்து இரத்தினச் சுருக்கமாக அதிபத்தர் பத்திமைத் தொண்டினை விளக்கினார்கள். " தம் தொழிலில் கிடைத்த சிறந்த பொருளை இறைவனுக்கு அளித்தல் " என்பது அவர் தம் குறிக்கோள். இவரைப் போலவே கணமங்கலம் என்ற பதியில் அவதரித்துத் தொண்டு புரிந்தவர் அரிவாட்டாயர். செந்நெல், செங்கீரை, மாவடு என்னும் சிறந்த

பொருள்களை இறைவனின் நிவேதனத்திற்கு ஆக்கித் தாம், கார் நெல் உண்டவர். நிறைவில், கிடைத்த செந்நெல்லை இறைவனுக்கே ஆக்கித் தாம் திருவமுது கொள்ளாது இறையருள் பெற்றவர் என்று நாயன்மார் வரலாற்று ஒப்பீடு செய்து உண்மை உணர்த்தி யருளினார்கள். சிறந்த பொருளை இறைவனுக்கு அளித்தல் என்ற நெறியை விளக்குதற்கு, அழகிற் சிறந்த தன்தேவியை இடைமருது இறைவனுக்கு அளித்த வரகுண பாண்டியன் வரலாற்றையும் உரைத்தருளி ஒப்பிட்டமை அன்பர்கள் மனத்தில் பசு மரத்தாணி போற்பதிந்தது. தொடர்ந்து புராண வரலாறு அருளினார்கள்.

அதிபத்தர் நாகைப்பட்டினத்தர். நாகைப்பட்டினம் நாகம் (ஆதிசேடன்) பூசித்த தலம். இத்தலத்தின் சிறப்பைச் சேக்கிழார்.

"பொன்னி நாடு எனும் கற்பகப் பூங்கொடி மலர்மேல்
நன்மை சான்றது நாகப் பட்டினத்திரு நகரம்"

என வருணிக்கிறார் "நாகைக் காரோணம்" திருக்கோயிற்பெயர். அக்காலத்தில் நாகை, கடல் வாணிகத்திற் சிறந்து விளங்கியது. சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், கோசலம், தமிழகம் என்னும் பதினெட்டுத் தேசத்து மக்களும் அங்கு வாணிபத்தின் பொருட்டுக் கூடுவர். இத்தகு சிறப்பு மிக்க நாகைப்பட்டினத்தில் கடலிற் சென்று மீன் பிடிக்கும் தொழில் செய்யும் நுளைப்பாடியில் வாழ்ந்தவர் அதிபத்தர். நுளையர் குலத்தினர். பரதவர்களுக்குத் தலைவர். பெருஞ்செல்வராய் வாழ்ந்தவர். கடலில் மீன் பிடிக்கும் வலைஞர், வாரி எடுத்து வந்த மீன்குவைகளில் உள்ள ஒரு தலைமையான மீனை, 'நட்டம் ஆடிய நம்பருக்கு' என அன்புடனே எடுத்துக் கடலில் விடுத்தவர். வலையில் நல்ல மீனாக ஒன்றே ஒன்று தான் கிடைத்தது என்றாலும் அதனையும் இறைவனுக்கே - சிவார்ப்பணமாகக் கடலில்விட்டவர். இப்படிச் சிறந்த பொருளை இறைவனுக்கு உரித்தாக்குதல் என்ற நெறியில் ஒழுகிவந்த அதிபத்தர்க்கு அநேக நாட்கள் ஒருமீனே கிடைத்தது அதனையும் இறைவனுக்கே ஆக்கினார். அதிபத்தர் வருவாய் குறைந்தது. உறவினர் பசியால் வாடினர். தாமும் உணவு இன்றித் திருமேனி தளர்ந்தார். ஆயினும் குறிக்கோளில் ஒருசிறிதும் தளர்ந்தார் அல்லர். இறைவன் இத்திருத்தொண்டரது அன்பு எனும் அமுதத்தை உண்டு வந்தார். அதிபத்தர்க்குக் கிடைத்து வந்த ஒரு மீனும் உலகம் முழுமையுமே விலையாக மதிக்கத்தக்கதும் பொன்மயமாக விளங்கிப் பேரொளி வீசி நவமணிகளால் ஆகிய உறுப்புக்களைக்

கொண்டதும் ஆன அற்புதத் தன்மை பொருந்திய மீன் ஒன்றை வலையில் படுமாறு இறைவன் அருளிச்செய்தனன். வலையை இழுத்துக் கரையிற்சேர்த்தனர் வலைஞர். அதன் ஒளி காலைக் கதிரவன் உதயமானாற்போல் இருந்தது. வலைஞர்கள் அதிபத்தரிடம் வந்து, "மீன் ஒன்று படுத்தனம்" என்றனர். அதனையும் சிவார்ப்பணமாக்கினர் அதிபத்தர்.

"என்று மற்றுளோர் இயம்பவும் ஏறுசீர்த்தொண்டர்
பொன்திரள் சுடர் நவமணி பொலித்தமீன் உறுப்பால்
ஒன்று மற்றிது என்னை ஆளுடையவர்க்கு ஆகும்;
சென்று பொற்கழல் சேர் எனத் திரையொடும் திரித்தார்"

எனச்சேக்கிழார் அதிபத்தர் திருத்தொண்டினை விளக்கியருளினர்.

'உலகம் பொருளையே முதலாகக் கொண்டு செல்லும்' என்னும் பொருட்பற்றினை முற்றிலுமாக நீக்கியவர் அதிபத்தர். நவமணி உறுப்புப் பொருந்திய மீனையும் கடலிலே விடுத்தார். பற்றற்றான் பற்றினையே பற்றாகப் பற்றினர். ஆதலால் பெருமான் திருக்காட்சி நல்கினர்; அதிபத்தர் இருகைகளையும் சிரமேற் கூப்பி வணங்கினர். பெருமான் சிவலோகத்தில் அடியார்களோடு இருக்கும் பாங்கு அருளிச் செய்தார்.

"அகில லோகமும் பொருள்முதற் றாம்எனும் அளவில்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரையற எறிந்த
இகலில் மெய்த்திருத் தொண்டர்முன் இறைவர்தாம் [விடைமேல்
முகில்வி சும்பிடை அணைந்தனர்; பொழிந்தனர் முகைப்பூ"

எனச் சேக்கிழார் இறைவன் அதிபத்தர்க்கு அருளிய திறத்தைப் பாடினர். குருமணிகள் இப்பாடலுக்கு இனிய உரை விளக்கம் நல்கியருளினர்கள்.

"அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளிலார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு"

எனவும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

எனவும் வள்ளுவர் கூறிய நெறிகள் இப்பாடலில் சேக்கிழாரால் எடுத்தாளப்பட்டுள்ளமையைக் குறிப்பிட்டார்கள்.

அடுத்து, அதிபத்தர் வரலாற்றை விளக்கியருள்கையில், உயிர் உள்ள மீனைத்தான் சுவாமிக்கு - அர்ப்பணம் செய்துவந்தார். ஆனால் நாயனார் மேற்கொண்ட தொழிலே "மீன் கொலைத் தொழில்" கொலைத் தொழில் புரிந்தவர் இறையருள் பெறுவது, சரியா? - என ஓர் ஐயத்தை எழுப்பி விடையும் அருளிச் செய்தார்கள் இறைவன், குற்றத்தையும் நெறிப்படுத்துபவன். இதனை இலக்கண நூலார் வழுவாயினும் அமைத்துக்கொள்க என்பர். வழு - குற்றம். வழுவமைதி - குற்றமாயினும் அமைத்துக் கொள்க என்பது அதன் பொருள். தம் மாட்டுப் பத்திமைச் சீலம் உடையார் "குற்றமே செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கை" இறைவன்பாலது. "குற்றம் ஒன்று அடியார் இலரானால் கூடுமாறு தனைக் கொடுப்பானை" என்பது சுந்தரர் வாக்கு. இனியன அல்லவற்றைச் செய்யினும், செயல் மெய்யன்பு காரணமாக நிகழ்தலின் இறைவன் எப்போதும் இனியனாய் மனத்தகத்தே விளங்குவான். இங்ஙனம் விளக்கம் அருளி, மூர்க்கர், எறிபத்தர், சத்தியார் முதலியோர் வரலாறுகளை ஒப்பீடு செய்தருளினார்கள். உலகியலில் அதிபத்தர் செயல் இழிவுபோலத் தோன்றும். அவர் தம் பத்திமை நெறியால் தம் தொழில் துறையாச் சீலமேதலை நின்றார். இறைவன் அவர்தம் திறம்தெளிந்து, அன்பெனும் அமுது உண்டருளினார். தெய்வ உணர்வில் உறைப்பு இருக்குமானால் குற்றம் செய்யினும் காப்பார். தெய்வ உணர்வு இன்மையால் சமணம் முதலியவற்றில் கொலை முதலியன குற்றமாகின்றது. உண்மையான பக்தியே உயிர்களை உயர்வழிச் செலுத்தும். உயிர்களின் குற்றங்களைத் தண்டித்து அருள்புரிவான் இறைவன் என்பது சமயக் கொள்கை - இங்ஙனம் தத்துவக் கருத்துக்களை உளங்கொள விளக்கி நன்னெறி காட்டியருளினார்கள்.

சிறந்த பொருள்களையே இறைவனுக்கு நிவேதனமாக ஆக்கும் முறைமையை மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதே இவ் வரலாற்றின் கருப்பொருளாய் அமைந்துள்ளது என்று நிறைவாக உரைத்தருளினார்கள்.

திருமுறை, சாத்திர ஒப்பீடுகள், தத்துவக் கோட்பாடுகள் அமைந்து புராண உபதேசம் நிறைந்தது. இன்சுவைத் தீங்கனிச் சாறு அன்பர்களின் தாகத்தைத் தணித்தது. இனிய சிந்தனைகளைத் தாங்கி இல்லம் ஏகினோம்.

"சிவனுக்கே அர்ப்பணமாய்ச் சிறந்தபொருள் தனை அளித்துப்
பவமறுத்தார் பாங்குரைத்த பரமகுருவருள் வாழ்க!"

வாழ்க குருமணிகள்!

# ஜவஹர்லால்நேரு

**T. சுந்தரராஜன். (7 Std E)**
ச. மு இ. மேல்நிலைப்பள்ளி, சீகாழி.

ஜவஹர்லால் நேரு உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள அலகாபாத் என்னும் ஊரில் 1889 ஆ ஆண்டு நவம்பர்த் திங்கள் 14 ஆம் நாள் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் மோதிலால் நேரு; தாயார் பெயர் சொரூபராணி அம்மையார். 'ஜவஹர்' என்னும் சொல்லுக்கு 'மாணிக்கம்' என்பது பொருள் 'லால்' என்னும் சொல்லுக்குச் 'சிவப்பு' என்பது பொருள். 'நேரு' என்பது குடும்பப் பெயராகும். வசதியான குடும்பத்தில் பிறந்த நேரு இளமையில் செல்வமாக வளர்க்கப்பட்டார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கு ஏற்ப இவர் இளம் வயதிலேயே கூர்மையான அறிவு உடையவராக விளங்கினர். ஒரு சமயம், நேரு சிறுவராக இருக்கும் பொழுது சிறுவர்களுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது பந்து தரையில் இருந்த ஒரு சிறிய ஆழமான பொந்துக்குள் விழுந்து விட்டது. பல சிறுவர்கள் கையைப் பொந்துக்குள் நுழைத்தார்கள். ஆனால், பந்து ஒருவர் கைக்கும் எட்டவில்லை. உடனே நேரு ஒரு வாளி நிறைய நீரைக் கொண்டு வந்து அந்த பொந்துக்குள் ஊற்றினர். பந்து மேலே வந்தது சிறுவர்கள் பந்தை எடுத்துக் கொண்டபின் நேருவின் அறிவுக் கூர்மையை வியந்து பாராட்டினர்கள். குதிரையேற்றம் அவருக்குப் பிடித்த மான விளையாட்டு ஆகும் நீச்சல் அடிப்பதில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

சிறுவயதில் நேரு வீட்டிலேயே கல்வி கற்ருர். ஆசிரியர்கள் அவரது வீட்டிக்கு வந்து பாடம் சொல்லித் தந்தார்கள். அறிவியல் துறையில் நேரு நல்ல ஆர்வம் காட்டிப் படித்தார். மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்ற அவர், அறிவியல் துறையில் உயர் பட்டம் பெற்றபின், சட்டக் கல்வி பயின்ருர். அதன் பிறகு 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பினர்.

தாயகம் திரும்பிய நேரு காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து காந்தியடிகளுடன் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்; நாட்டின் விடுதலைக்காகப் பலமுறை சிறை சென்ருர். ஒரு

முறை, சிறையில் இருக்கும் போது அவரின் மனைவியார் கமலா நேரு உயிர் நீத்தார். எனினும், விடுதலைப் போராட்டத்தில் நேரு தளர்ச்சி அடையவில்லை.

இந்தியா விடுதலை பெற்றபின் முதல் பிரதமராகப் பதவியேற்ற நேரு, உலக அரங்கில் நம் நாடு முன்னணிக்கு வரப் பெரிதும் பாடுபட்டார். அணு ஆற்றலை ஆக்கப் பணிகளுக்கே பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார். உலகில் போரும் பூசலும் குறைய, 'பஞ்சசீலக்கொள்கை' என்னும் அமைதிக் கருத்தை வெளியிட்டார். தம் அளப்பரிய தொண்டுகளால் நேரு, 'மனிதருள் மாணிக்கம்', 'ஆசிய சோதி', 'சமாதானப் புரு' - என்றெல்லாம் புகழ்ப்பெற்றார்.

நேரு குழந்தைகளிடம் மிகுந்த அன்புகாட்டினார். குழந்தைகள் அவரை 'நேரு மாமா' என்று அன்புடன் அழைத்தார்கள். குழந்தைகளிடம் பேரன்பு கொண்ட நேரு, தம் பிறந்த நாளைக் குழந்தைகள் திருநாளாகக் கொண்டாடுமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி நாம் ஆண்டுதோறும் குழந்தைகள் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம்.

ரோஜா மலர் நேருவுக்கு மிகவும் பிடித்தமான மலராகும். தமது சட்டையில் ரோஜா மலரை அழகுபட வைத்துக் கொண்டிருப்பார்.

நேரு ஏழைகளிடம் இரக்கமும் அன்பும் கொண்டவர், அஞ்சாத நெஞ்சமும் அமைதியான எண்ணமும் உடையவர். தம்முடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் நாட்டுக்காகவே தியாகம் செய்தவர். அல்லும்பகலும் அயராது நாட்டுக்கு உழைத்த மனிதருள் மாணிக்கம் நேரு 1964 ஆம் ஆண்டு இவ்வுலகவாழ்வை நீத்தார். அவரது பொன்னுடல் மறைந்தாலும் புகழுடல் மறையாது.

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருக்கண்ணோக்கிற்குப் பள்ளி மாணவர் அனுப்பிய இக்கட்டுரை - நேரு நூற்றாண்டுவிழா நினைவாக வெளியிடப்பெற்றுள்ளது.]

நேரு வாழ்க! அவர் புகழ் வளர்க!

**மதிப்புரை**

# சிவஞான சித்தியார் - சுபக்கம்

## (தெளிவுரை)

[ தெளிவுரை ஆசிரியர் : டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பிஎச். டி., வெளியீடு: அருள்நந்திசிவம் அருட்பணிமன்றம், 78, செல்விநகர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 1. அளவு : டபிள் டிம்மி 1×16. பக்கங்கள் - 269. விலை ரூ. 16—00 ]

சிவஞானசித்தியார், சிவஞான போதத்தை முதல் நூலாகக் கொண்டு எழுந்த சைவசித்தாந்த சாத்திரம். அருள்நந்தி சிவாசாரியரால் அருளப்பெற்றது. இதுபரபக்கம், சுபக்கம் என்னும் இருபகுதிகளைக் கொண்டது. சிவஞானசித்தியார் சுபக்கம் சைவ சித்தாந்தக் கொள்கைகளை விளக்கும் இனிய நூல்.

தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களால் எழுதப்பெற்ற தெளிவுரை எளிதில் பொருள் உணரும் வண்ணம் - மனத்தமையும் வண்ணம் அமைந்துள்ளது. சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கு உரை எழுதியும் சாத்திர விரிவுரை யாற்றியும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியும் பல்லாண்டுக்காலம் சைவத்தமிழ்த் தொண்டாற்றிய அவர்களின் புலமை, அவர்கள் செய்த உரையில் மின்னிச் சுடர் விட்டு ஒளிர்கின்றது. ஆராய்ச்சி முன்னுரைசைவசித்தாந்தம்பயில்வார்க்கும் நூலைப்பயில்வார்க்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பல்லாற்றானும் துணைபுரியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சிவஞான போதமும், சித்தியாரும் பற்றி அட்டவணையிட்டு ஒப்பீடு செய்தும் அணிநலன்களைத் தொகுத்தளித்தும் திருமுறைகளோடு சித்தியாரை ஒப்பிட்டு நோக்கியும் ஆராய்ச்சி முன்னுரை பல்வேறு அங்கங்களோடு நூலை ஆடி என விளக்கிக்காட்டுகின்றது.

குமரகுருபர சுவாமிகள் முந்நூறாவது ஆண்டு விழா வெளியீடாகிய இந்நூல் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய - ஒவ்வொரு நூலகத்திலும் இருக்க வேண்டிய - ஒவ்வொரு ஆராய்ச்சிவாளர் கையிலும் மிளிரவேண்டிய மிகவும் அற்புதமான படைப்பு ! அச்சும் கட்டும் அழகுக்கு அழகு சேர்க்கின்றன ! அருள் நந்திசிவம் அருட்பணிமன்றத்தினரின் சீரிய நூல் வெளியீட்டுத் தொண்டு பாராட்டுக்கு உரியது.

— கா. ம. கண்ணப்பன்.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத்தலச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. சுக்கில - ஆடி - ஆயில்ய வழிபாடு 2—8—89 அன்று ஏமநல்லூர் (திரைலோக்கி) அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது, அப்பர் சுவாமிகள் வைப்புத் தலமாக அருளிச் செய்ததும், கருவூர்த்தேவர் திருவிசைப்பாப் பதிகம் பெற்றதும் ஆகிய சிறப்புடையது இத்தலம். இத்தலத்தின் சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., விரிவுரையாற்றினர் 'பேராவூர், இடைக்குளம், சோமேச்சுரம், கருப்பூர், ஏமநல்லூர்த் தேவாரங்களும் தலச் சிறப்புக்களும்' என்ற நூல் வெளியிடப் பெற்றது. அன்பர்கள் வழிபாடு ஆற்றிப் பயன்பெற்றனர்.

## குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைத் திருக்கூட்டம் நிகழ்கின்றது. இம்மாதம் 97 ஆவது அருளுபதேசம் 6—8—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கிச் சிறப்பாக நடை பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் திருத்தொண்டர் புராணவரலாறுகளின் வழி, சைவசித்தாந்தச் செந்நெறி புகட்டியருகின்றார்கள். இம்மாதம் கலிக்கம்பநாயனார் புராணத்தை மனங்கொள உபதேசித்தார்கள். "உலகில் எந்தப்பொருளும் வேண்டா; இறைத்தொண்டே தேவை, எனக் கருதுவோருக்கு மனக்கலக்கம் தோன்றுது" என்பதைப் பன்னிரு திருமுறை, சாத்திர, புராணக் கருத்துக்களோடு ஒப்பிட்டு உணர்த்தினார்கள். மனைவியாரின் கைதடிந்த கலிக்கம்பர் செயல், அவர்தம் பற்றற்ற நிலையைக்

காட்டுகின்றது. இறைவன் தறந்தோர் உள்ளப் பெரும்பயனாக விளங்குபவன் – இவ்வாறு புராணவழிச் சிந்தனையாகத் தத்துவ நெறியருளிச் செய்தார்கள்.

தருமை ஆதின அடியார்கள், அன்பர்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். அடுத்து 98 ஆவது அருளுபதேசம் 3–9–89 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக.

## மகாகயிலாயக் காட்சி

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் கயிலை கண்ட திருநாளாகிய ஆடி அமாவாசை நாளில், தருமை 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் தரிசித்த மகாகயிலாயக் காட்சியின் 30 ஆவது ஆண்டுவிழா 1—8—89 செவ்வாய்க்கிழமையன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ சொக்கநாதர் பூசை மடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்கு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் சிறப்பு வழிபாடு நிகழ்த்தினர்கள் பண்ணிசைவாணர்களால் திருமுறைப் பாராயணம், அகண்ட பாராயணமாக ஓதப்பெற்றது நண்பகல் 1 மணிக்கு மாகேசுவரபூஜை நடைபெற்றது.

மாலை 6 மணி அளவில் தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் பூசைமடத்தில் 'திருக்கயிலாயச் சிந்தனை' என்ற பொருளில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., திருக்கயிலைத் திருப்பதிகங்கள் பற்றியும், டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., பிஎச். டி. வடஇந்தியத் தலங்கள் பற்றியும், டாக்டர் திரு. மு சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., பிஎச் டி., திருமலைச் சிறப்புப் பற்றியும், திரு. சா. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி பற்றியும், திரு. இரா. மருதநாயகம், எம். ஏ., அப்பரும் கயிலையும் பற்றியும், திரு இரா செல்வநாயகம் கயிலைகண்ட அருளாளர்கள் பற்றியும் விரிவுரையாற்றினர்.

இரவு, வண்ணவிளக்குகளால் அலங்காரம் செய்யப்பெற்ற வெள்ளி ரதத்தில் பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் திருக்கயிலாயத் திருவுருவப்பட வீதியுலா சிறப்பாக நடைபெற்றது திருக்கயிலாய நிலையத்தில் தரிசன வழிபாடு நிகழ்ந்தது. அதுபோது தருமை ஆதீனத் திருக்கோயில்களில் பல்லாண்டுகளாகத்திருமுறைப்பணிபுரிபவரும்திருவையாறு

ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோயில் ஓதுவாமூர்த்தியுமாகிய திரு. முருகையாஓதுவாருக்குப் பொன்னுடைவழங்கி ஆசியருளினர்கள்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம், ஆதீன அடியார்கள், திருமுறை இசைவாணர்கள், புலவர்கள், பக்தர்கள் அனுவலர்கள் புடைசூழத் திருவுலாப் போந்தருளினர்கள். அன்பர்கள் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

சமயகுரவருள் மூன்றுமவராகிய ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா சுக்கில - ஆடி - 25 ஆம் நாள் 9—8—89 சுவாதி நாள் கூடிய புதனன்று சிறப்பாக நடைபெற்றது. சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் திருக்கோயிலிலும், தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும் ஸ்ரீசுந்தரருக்கும் ஏனைய சமயாசாரியர்கட்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் பூசை மடத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராண படனம் நடைபெற்றது. இரவு ஸ்ரீ சுந்தரர், சேரமான் பெருமான்நாயனர் திருவீதியுலா, வேதபாராயணம், திருமுறைப் பாராயணத்துடன் நடைபெற்றது. வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி.எட்., பிஎச்.டி., வித்துவான் திரு கா. ம. கண்ணப்பன் எம். ஏ. பி. எட்., புலவர் திரு கே. கணபதி, பி. லிட்., பி. எட்., ஆகியோர் அற்புத விளக்க உரையாற்றினர். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் இருவேளைகளிலும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் ஸ்ரீசமயாசாரியர் சந்நிதியில் திருமுறைக் கலாநிதி திரு எம். கனகசபை பிள்ளை திருமுறைப்பண்ணிசையுடன், அற்புதவிளக்கவுரை தொடங்கிற்று. சிவஸ்ரீ. ஜி. பரமேசுவரதீட்சிதர் தலைமையில் வித்துவான் திருமதி. ப. நீவா, எம்.ஏ., எம்.ஃபில்., விளக்கவுரை நிகழ்த்தினர், அன்பர்கள் தரிசித்தும் விரிவுரை கேட்டும் பயன் பெற்றனர்.

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி கனகாபிஷேக நினைவு சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரி-பட்டமளிப்புவிழா 'சைவசித்தாந்தக்கலாநிதி' வகுப்புத் தொடக்கவிழா

மயிலாடுதுறை மையத்தில் :

கல்லூரியின் மயிலாடுதுறை மையத்தில் 10—7—89 திங்கட்கிழமை மாலை 6-00 மணிக்கு ஸ்ரீ குருஞானசம்பந்தர்

மிஷின் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கட்டிடத்தில் விழா நடைபெற்றது. அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன கௌரவ இயக்குநர் திரு. தி. ந. இராமச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் எழுந்தருளித் திருவிளக்கேற்றி வைத்துச் 'சைவ சித்தாந்தக் கலாநிதி' வகுப்பினைத் தொடங்கி வைத்து, சைவ சித்தாந்த இளம்புலவர், சைவசித்தாந்தப்புலவர்வகுப்பில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி ஆசியுரை அருளினார்கள். நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தர மூர்த்தி, தருமை ஆதீனக் கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், வித்துவான் திருமதி ப. நீலா வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்கள். டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி நன்றி நவில விழா இனிது முடிந்தது.

மதுரை மையத்தில் :

13—7—89 வியாழக்கிழமை மாலை 7 மணியளவில் மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் நடைபெற்றது திரு. பி டி. ஆர். கமலதியாகராஜன் அவர்கள் தலைமையேற்க, திரு. சொ. காவேரிமணியம் அவர்கள் வகுப்பினைத் தொடங்கி வைத்தார்கள். மதுரை ஹார்விராம் மருத்துவமனை டாக்டர் திரு. ஆர். வெங்கட சாமி அவர்கள் சான்றிதழ் வழங்கினர், டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா சிறப்புரையாற்றினர். திரு.என்.எஸ். குபேந்திரன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

சிதம்பரம் மையத்தில் :

14—7—89 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்குச் சிதம்பரம் கனகசபைநகர் தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழக இந்திய மொழிப் புல முதன்மையாளர் முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் தலைமையேற்றுச் சான்றிதழ்கள் வழங்கினர். முனைவர் திரு. சு. சாமிஐயா அவர்கள் சிறப்புரையாற்றினர். கல்லூரி அமைப்பாளர் திரு. க. சுவாமிநாதன் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

காரைக்கால் மையத்தில் ;

14—7—89 வெள்ளிக்கிழமை மாலை 6·00 மணிக்குக் காரைக்காலம்மையார் ஆலயத்தில் நடைபெற்றது. ஓய்வு பெற்ற

நீதிபதி திரு. அ. மு. ப. ந. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை நல்கினர். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் எழுந்தருளி ஆசியுரை வழங்கி வெற்றிபெற்ற பயிற்சியாளர்களுக்குக் காரைக்காலம்மையார் பிரசாதத்தோடு கனி ஒன்று வைத்துச் சான்றிதழ்கள் வழங்கினர்கள். கல்லூரி அமைப்பாளர் திரு. இராஜ. சண்முகம் ஆண்டறிக்கை வாசித்தார். நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, தருமை ஆதீனக் கலைக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் மு. சிவச்சந்திரன், வித்துவான் திரு. மு. சுந்தரராசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். புலவர் திரு. அ. இலக்குமணன் அவர்கள் நன்றியுரையாற்ற விழா இனிது நிறைவேறியது.

## பாளையங்கோட்டை மையத்தில் :

22—7—89 சனிக்கிழமை மாலை 5 மணிக்குச் சைவசபையில் தலைவர் திரு. ச. சைலப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் சைவசித்தாந்தக் கலாநிதி வகுப்பினைத் தொடங்கி வைத்துத் தேர்ச்சிபெற்ற பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி உரைநிகழ்த்தினர்கள். டாக்டர் திரு கு. சுந்தரமூர்த்தி அவர்கள் சிறப்புரை நிகழ்த்த திரு. சி சு. மணி அவர்கள் வகுப்புத் தொடக்கவுரைநிகழ்த்தினர். புலவர் ம. சிவசம்பு அவர்கள் நன்றியுரை நிகழ்த்த விழா இனிது நிறைவெய்தியது.

## சென்னை மையத்தில் :

30—7—89 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குத் திரு. சாமி தண்டபாணி திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். நிலையம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையாற்றச் சென்னை அறநிலையத்துறை ஆணையர் & செயலர் திரு. கு. ஆளுடைப்பிள்ளையவர்கள் தலைமையுரை நிகழ்த்தினர்கள். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எ ஞானம் அவர்கள் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி உரை நிகழ்த்தினர்கள். பேராசிரியர்கள் திரு. அ. பாலறுவாயன், டாக்டர் திரு. பி. எஸ். சோமசுந்தரம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்கள். புலவர் திரு. என். இராமலிங்கம் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

# எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கில ஹூ ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—8—89 முதல் 16—9—89 முடிய)

சுக்கில ஹூ ஆடி மீ 32உ அவிட்ட நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 56 நாழிகை 45 விநாடிக்கு, கடக லக்னத்தில் மகர ராசியில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டுக் கடக ராசியினின்றும் சிம்மராசியில் சங்கிரமணமாக ஆவணி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். ஆவணி மீ 1உ குருவாரம் விஷ்ணு பதி புண்ணியகாலம். இவ்வாண்டில் சேனாதிபதி குருபகவான் ஆகிறார் அதனால் உலகில் அரசர்கள் ஜனாதிபதிகள் தேசபரிபாலனம் நன்றாகச் செய்து ஜனங்களின் அன்பைப் பெறுவர். தேசங்களில் தேவதோத்ஸவங்கள் நடந்து மழை எல்லா இடங்களிலும் பொழியும், பூமி வளமுறும். சங்கிரமண காலகிரக ஸ்திதியினால் ஆன்றோர்களின் சீரிய நெறியில் தர்மங்கள் பொது நலப்பணிகள் இனிது நடந்து வரும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவபெருமானைப்பூசிக்கும் பாக்கியத்தில் வந்துசிவராஜ யோகத்தில் திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் லோகத்திற்கு அஹிம்ஸா தர்மம் பிரஜைகள் சக்திக்கேற்பப் பிறர், நலம் பெறும்பான்மையில் நிகழ்த்தல் ஆகும். இறைவனின் சித்தம்,சூரிய பகவான் சிம்ம ராசியில் விளங்குகின்ற மே மாதம் தொடக்கம் விநாயகரின் பிரதிஷ்டை ஹோமயக்ஞங்களின் விசேஷம் ஆகியவை பற்றித் தம்திருவாய்மலர்ந்து விமரிசித்து அருள்வார்கள். பக்தர்கள் சிவநேயர்கள் சிஷ்ய கோடிகளுக்கு மானசத்தால் அருள்பாலித்தும் திருக்கரங்களால் ஸ்பரிஸதீட்சையில் மகா பிரசாதம் வழங்கி அருளியும் ஆசிர்வதிப்பார்கள், தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால காலபூஜைகள் சிறப்புப் பூசனைகள் நடைபெற்று உலகம் சுபிட்சமுறும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். அதற்கேற்பச்செலவினமும் ஏற்படும். பூமிஇயந்திரங்களில் விருத்திஏற்படும். புண்ணிய க்ஷேத்திராடனம் தெய்வ தரிசனம் செய்தல் சாஸ்திரோக்த வழியில் செயல்படுதல் ஆகும். ஆகஸ்டு 22தேதிக்கு நற்செய்தி வரும். பத்திரலகிதங்களில் ஒப்பந்தங்களில் நல்லன ஏற்படும், தாரம்புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும். வித்தியா வியாபாராதி கலைத்துறை யில் அரச நன்மைகள் உண்டாகும். நவீன இயந்திர சாதனம் ஒன்று வாங்குதல் ஆகும். நெருங்கிய தொடர்புடையவர் ஒருவர் மனஸ்தாபத்தில் விலகி இருப்பினும் மாதக்கடைசியில் ஒன்று சேருவர். செப்டம்பர் 3உ ஆனல் எல்லாவற்றிலும்நற்பல பிராப்தி யாகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கணிசமாக வந்து கொண்டிருக்கும். பொன் மணி பூஷணம் தரும். நல்ல வாகனம் ஒன்று வாங்குதல் ஆகும். ஆகஸ்டு 20 தேதி ஆனல் வித்துவத்துவம் கலைத்துறையில் ஜீவனேபாயம் உத்தியோக பிராப்தி ஆகியவற்றில் நல்லன ஏற்படச் செய்யும். எல்லாக் காரியங்களும் தெய்வபலனில் சிறப்பாக நடக்கும் செப்டம்பர் 8 ஆம் தேதி ஓர்உயர்வு தரும். செப்டம்பர் 11, 12, 13 தேதிகளில் உழைப்பு அலைவு ஏற்படும். சனி, ஞாயிறு சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் கணிசமாகவரும். நல்ல பூஷணம்தரும். பரோபகாரம் தர்மங்கள் செய்யும். நிறுத்த இயலாதபடிக்கு நல்ல காரியங்கள் பிடி பிடி என நடக்கும். செப்டம்பர் 8 உ ஆனல் பசுபால் பிராப்தி மிரும். கட்டிட நிர்மாணம் அடிக்கல் நாட்டுதல் ஆகும். சுகம் தரும் பொருள் பிராப்தியளிக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 17, 18 செப்டம்பர் 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் ஆகஸ்டு 26 உ முதல் பிரயோஜன சித்தியாகும். எழுத்துமூல விஷயங்களில் கடிதத் தொடர்புகளில் நன்மைகள் ஏற்பட்டு வரும். நல்லோர் பிரபலஸ்தர்களால் அனுகூலங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். எல்லாப் பெரிய காரியங்களிலும் ஜெயபிராப்தியாகும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஆகஸ்டு 20, 21 செப்டம்பர் 16 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

6 கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். அடிக்கடி அவசிய செலவினமும் நிலையற்ற தொழில் இருப்பிடத்தில் மாறுதல் அல்லது ஒய்வு பெறுதலும் ஆகும். செப்டம்பர் 8 உ ஆனால் ஓர் வெகுமை வஸ்துவின் பிராப்தி, குடும்பத்தில் நல்ல காரியம் நிகழ்தல் ஆகும். பழையன புதுப்பித்தல் ஆகும். எல்லாவற்றிலும் முதலீட்டிற்கு உள்ள பலன் இருந்து வரும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் 4 வகையில் வந்து நிறையும். வித்துவத்துவம், கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் செப்டம்பர் 4 தேதியில் ஓர் உயர்வு பலனளிக்கும். லேவா தேவிகளில் இலாப பிராப்தியாக இருந்து வரும். எல்லாக் காரியங்களும் பெருமதிப்பில் நடந்து கொண்டிருக்கும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஆகஸ்டு 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் நன்மதிப்பில் வரும். வித்தியா வியாபாரதிகளில் கலைத்துறையில் ஜீவனோபாயம் உத்தியோகத்தில் அரசு நன்மைகளும் பதவி உயர்வும் அளிக்கும். பூமியில் விருத்தி பலன் ஏற்படும். எல்லாக் காரியங்களும் நெடியான தோரணைக்கு ஏற்பச் சிறப்பாக நடந்தேறும். எல்லாவகையிலும் இலாபபிராப்தியாக இருந்து வரும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுப பலனை நடக்கும். பண வருமானம் மதிப்புடன் வந்து கொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் ஜீவனோபாயத் தொழில்களில் ஆகஸ்டு 21 உ முதல் நல்வாய்ப்புக்களை ஏற்படுத்தும். வீடுவாகனாதிகளில் நல்ல சௌகரியம் தரும். எல்லாக் காரியங்களும் புத்தி மேம்பாட்டில் சிறப்பாக நடந்து வரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தானதர்மத்துடன் நடந்து வரும். ஆகஸ்டு 28, 29, தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அடிக்கடி செலவினமும் ஏற்படச்செய்யும். வித்துவத்துவம், கலைத்துறையில் ஜீவனோபாயத் தொழில் உத்தியோகம் இவற்றில் செப்டம்பர் 8உ ஆனால் அரசாங்க நன்மைகள் ஏற்பட்டு வரும். எல்லாக் காரியங்களையும் நன்முறையில் நடத்தும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஆகஸ்டு 30,31 செப்டம்பர் 1 இத் தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் பெருமதிப்பில் வரவாகும். வித்துவத்துவம் கலைத்துறையில் புகழ் தரும். அரசு கடிதத் தொடர்புகளில் ஆகஸ்டு 22 தேதிக்கு நற்செய்தி வரும். நவீன இயந்திர சாதனம் தரும். குறிப்பிட்ட எல்லாக்காரியங்களும் கௌரவத்தில் நன்முறையில் நடந்துவரும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகம் ஆகியவற்றில் அரசாங்கத்தில் போற்றுதல் உயர்பதவி வருதல் ஆகும். எல்லாக்காரியங்களும் பெருமதிப்பில் நடந்துகொண்டிருக்கும். வீடுவாகனங்களில் சௌகரியம் இருந்துவரும். தாம்பத்திய வாழ்க்கை சொகுசாக நடந்துவரும். செப்டம்பர் 4, 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
**ஆராய்ச்சி நிறுவனம்**

**இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-V**

பாடம் - 7.

ஸ்ரீலஸ்ரீசிவஞான தேசிகரின்
**திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :**

**பண்டார சாத்திரங்கள் :**

# ஸ்ரீ அசபா நடனப் பதிகம்

**திரு. தி. ந. இராமச்சந்திரன், பி. காம்., பி. எல்,**

தஞ்சாவூர்.

தருமை ஆதீன செம்மாசனத்தை அலங்கரித்த ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சொற்றமிழ் பாடிச்சொக்கேசனைச் சொக்கவைத்தவர். சிவனடியாருக்கு இயல்பாக உள்ள பத்துக் குணங்களும் நிரம்பப் பெற்றுத் தருமை ஆதீன பத்தாம் குருமகாசந்நிதானமாக விளங்கினார்கள். இவர்கள் அருளிய பாடல்கள், "திரு அருட்பாத் திரட்டு" என்ற தலைப்பில் 1958 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. வெளியீட்டு எண் 423 ஆகும். கொடுக்கப்பெற்ற பதினைந்து நூல்களில் ஸ்ரீ அசபா நடனப் பதிகம் பன்னிரண்டாம் இலக்கம் பெற்றது.

பதிகம் என்ற சொல்லானே இப்பாடற்றொகுதி பத்துப் பாடல்களைக் கொண்டது என்பது போதரும். பத்துப் பாடல்களும் பத்து மணிகள். ஒவ்வொரு பாடலிலும் சிவாநுபூதியின் சொல் வடிவினை, உருகி ஓதுவோர் தரிசிக்கலாம்.

அசபா நடனம் ஆடுபவர் தியாகேசர். நிகழ்த்தப்படும் இடம் திருவாரூர். திருவாரூரின் பெருமைக்கு எல்லையில்லை.

" அயிராவணம் ஏறாது ஆன்ஏறு ஏறி
அமரர் நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமே என் அம்மானே நின்
அருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே "

என்பது வாகீச வேதம். இவ்வேதக் கருப்பொருளாக இருப்பதே அசபா நடனம்.

"எக்கிரமத்தினும் இறைசெயல் அருளே என்றும்" என்பதே ஆகமாந்தம். இறைசம்பந்தமான ஒவ்வொரு செயலும் கருணையின் வெளிப்பாடே. இதை உள்ளபடியே காண்டற்கு வேண்டப்படுவது அருட்கண்.

அசபா நடனப் பதிகத்தின் மூன்றும் பாடல் இப்படிக் கூறுகின்றது. தியாகேசன் முகமும் கருணை; சடை மகுடமும் கருணை; செவ்வடிவமும் கருணை; திருமேனி தாங்கும் செங்கழுநீர் மாலையும் கருணை; செவ்வந்தியும் கருணை; இளமானும் மழுவும் கருணை; மேலான திருவயிறும் கருணை; கங்கணமாக அணிப்படும் பாம்பும் கருணை; புலித்தோலும் கருணை; விஷப்பையோடு கூடிய சர்ப்பம் கிண்கிணியாகித் தழுவும் சரணமும் கருணை; அருகேயுள்ள உமையம்மையும் கருணை; வேல் பிடிக்கும் மதலையும் கருணை; சிங்கங்கள் சுமக்கும் மணிப்பீடமும் கருணை; எல்லாப் புவனங்களிலும் வாழ்தற்பொருட்டுத் திருவாரூரில் தியாகேசர் எழுந்தருளியிருப்பதும் கருணை; பாசம் அதிர நடமிடும் அசபையும் கருணை; இத்தகு கருணையை யாரே அறிவார்?

அசபையின் "விரிவெல்லாஞ் செவாமங்களுட் காண்க" (மாபாடியம் சூ. 4. அதி 1) என்று கூறிய மாதவ சிவஞான யோகிகள் அசபை பற்றி மேற்சொன்ன அதிரணத்தில் சில குறிப்புக்கள் தந்துள்ளார்.

1. கருவிகளைச் செலுத்தும் சூக்கும பஞ்சாக்கரம் அசபையாய்ப் பரிணமித்துப் பிராணவாயுவை அடக்கியும் விட்டும் நின்றுணர்த்தும்.

2. சூக்கும பஞ்சாக்கரத்தின் பரிணாமாகிய அசபை அதிதெய்வங்களைப் பற்றி ஒரோவொன்று மும்மூன்றாய் மீளமீள மாறி ஒரோவொன்றாய்ப் பரிணமித்து, இடையிடையே அறுவகைச் சூனியங்களுடைய பன்னிருகலைப் பிராசாதமாம் எனவும், இங்ஙனமாகலின் சூக்கும பஞ்சாக்கரம், தூல பஞ்சாக்கரம், அசபை, பிராசாதம் என்பன தம்மின் வேறல்ல எனவும் உணர்ந்துகொள்க.

"திருவளர் தாமரை" என்று தொடங்கும் திருக்கோவையார் பாடலில் "அனநடை வாய்ந்து" என்று ஒரு தொடர் வருகின்றது. அன்னம் என்பதே ஈண்டு அனம் என்று குறுகிற்று. அனநடை என்பதற்கு விளக்கம் தரும் "திருக்கோவையார் உண்மை விளக்கம்" கீழே குறிக்கப்படும் செய்தியை வழங்கியுள்ளது. "அனநடை என்றது ஈண்டு ஹம்சத் தியானத்தை, அசபை மந்திரத் தியானத்துடன் அனவரதமும் நடக்கும் உயிர்ப்பு, சதா சிவசிந்தனையில் இருப்பார்க்கு ரேசக பூரக கும்பகங்களாகிய

உயிர்ப்பு இயக்கங்கள். " அவன் நான் " என்ற அநுபவத்திலே இயங்கும். இதுவே அசபை. இதுவே (அன்னம்) "ஹம்ச" எனப் படுவது. ஆகவே அசபை என்பது சிவயோகாநுபவம் பேறுகும்.

சிவம் அசைவற்றது. அசைவு சக்தியின் லீலை இதை,

' அத்தனை கோடிப் பொருளினுள்ளே நின்று
வில்லை அசைப் பவளே "

என்று மகாகவி பாரதியார் கூறியுள்ளார். மேலும் சக்தியை, "ஆதிப்பரம் பொருளின் ஊக்கம்" என்றும் குறிப்பிடுகிறார். அசபா நடனத்தில் அனைத்தும் அசையும்; என்றாலும் சிவத்திற்கு அசைவில்லை.

" துங்கமழு மானசைய வங்கதஞ் சதகோடி
சூரியர்கள் போலசையமால்
தேடுமர வக்கிண் கிணிப்பாத மசையவொரு
செம்பொன்மலை வல்லியசையச்
செய்யகும ரேசர்நடு நின்றசைய நவரத்ன
சிம்மா சனத்திருந்தே
யாடுமுன் னசபநட மடியனென் றுங்காண
அருளுவாய் தியாகேசனே
யசைவில்கம லேசனே யசபா நடேசனே
ஆனந்த வுல்லாசனே "

என்ற ஸ்ரீ அசபா நடனப் பதிகத்தின் முதற்பாடல் அருளிய செய்தியை உன்னிப்பார்த்தல் நன்கடனாகும்.

அசபா நடனக்குறிப்பு சித்தாந்த அத்வைத முத்தியே. இதன் இலக்கணத்தைச் சொல்லில் வைத்துக் காட்ட முடியாது. அனைத்திற்கும் ஆதாரமாக உள்ள சருவ வஸ்துவே இதனுள் குறிப்பிக்கப்படுகின்றது. நித்தியமாய், சத்தியமாய், நிராமயமாய், நிர்த்தொந்தமாய், நிராதாரமுமாய் உள்ள ஒன்றே இங்கு அநுபவப்படுகின்றது. "இதைச்சொல்" என்றால் சொல்லுமாறு எங்ஙனே? இதையே இப்பதிகத்தில் இரண்டாம் பாடல்,

" நிர்மல நிராபாச நிற்சங்க நிர்விகற்ப
நிஷ்ப்ரபஞ் சச்சோதியாய்
சுத்தபூ ரணசச்சி தானந்த முஞ்சோம
சூரிய ரனந்தகோடி
துங்கவெளி கங்குலென மங்கவரு மோர்தற்
சொருபப்ர காசமும் விடா

அத்துவித சித்தாந்த முத்திநீ யானதால்
ஆரறிவர் தியாகேசனே
அசைவிக்கம லேசனே யசபா நடேசனே
ஆனந்த வுல்லாச னே. ''

என்று தெளிவுபடுத்துகின்றது.

திருநாகைக் காரோணத் தேவாரத்தில் அப்படி அடிகள் "எந்தை பவன் பற்றே பற்றுகக் காணின், நாகைக்காரோணத்து என்ஞான்றும் காணலாமே" என்று அருளியுள்ளார். கண்ணுக் காண்டற்கரிய இறைவை, "காணும் கண் அவனே" என்று உணர்ந்தோ அல்லது, ''கண்ணே, கண்ணிற் கருமணியே, மணியாடு பாவாய் காவாய்'' என்று அப்பர் அடிகள் போல் உருகி நின்று வேண்டினுலோ, காட்சி சித்திக்கும்; சித்திக்கவே, ''கண்ணுல் யானும் கண்டேன் காண்க'' என்று கூற நம்மாலும் ஒல்லும். இதையே இப்பதிகத்தின் நான்காம் பாடல் குறிப்பிடுகின்றது.

'' கண்ணின்வளர் கருவூலமே
திருவருட் செல்வமே யானந்த வாழ்வே
... ... ... ... ... .. ... ... ...
ஒருபரப் பிரமமே யென்றுனைப் பாடினுன்
உல்லாசமா யாடியே
பொன்பூர ணனந்த வின்பவமு தினைமேவ
வுனதுள மகிழ்ந்தருளுவாய்
அருணகண பணவுரக கிண்கிணிக் காலனே
யழகாரி தியா கேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
ஆனந்த வுல்லாசனே. ''

கமலம்போல் மலர்ந்து விளங்கும் பதியே திருவாரூர். கமலேசன் மகிழுமூர் திருவாரூர். '' திருவாரூர் மருங்கெலாம் தெள்ளுமோசைத் திருப்பதிகங்கள் பைங்கிளிபாடுவ கேட்பன பூவைகள் '' இவ்வூர் ஓர் கமலமே

'' நிலமகட் கழகார் திருநீள் நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்மகட்கு வண்தாமரை போல்மலர்ந்
தலகில் சீர் திருவாரூர் விளங்குமால் ''

என்பது தெய்வச் சேக்கிழாரின் திருவாக்கு.

அசபா நடனம் நிகழுமிடமான இவ்வூரைக் குறிக்க வந்த இப்பதிகம்.

" மண்டலந் தன்னிலா ரூரென்று முண்டக
மலர்ந்தமூ லாதாரம் ... ... ... ... ... .. "

என்று கூறுகின்றது.

'இங்கு நிகழும் அசபா நடனம் காண வருவாய்' என்று எம்மிறை வன்றொண்டரை அழைத்தனர் என்று சொல்லத் தோன்றுகிறது. சிதம்பர நடனத்தில் திளைத்திருந்த நம்பியாரூரருக்கு ஓர் அருள் கட்டளை சிவனார் இட்டனர். அது வருமாறு :-

" தடுத்து முன் ஆண்ட தொண்டனார் முன்பு
தனிப் பெருந் தாண்டவம் புரிய
எடுத்த சேவடியார் அருளினால் " கரணம்
எறிபுனல்மறி திரைப் பொன்னி
மடுத்த நீள்வண்ணப் பண்ணை ஆரூரில்
வருக நப்பால் " என வானில்
அடுத்த போதினில் வந்தெழுந்த தோர்
நாதம் கேட்டலுமே அது வுணர்ந்தெழுந்தார் "

இங்குப் பெருந்தாண்டவம் என்று போற்றப்படுவது அசபா நடனமாகும்.

திருநள்ளாற்றில் உள்ள நாக விடங்கர் 'உன்மத்த நடனம்' ஆடுகிறார்; நாகைக் காரோணத்தில் சுந்தர விடங்கர் 'பராவார தரங்க நடனம்' ஆடுகிறார்; திருக்காறாயிலில் ஆதிவிடங்கர் 'குக்குட நடனம்' ஆடுகிறார்; திருக்குவளையில் (திருக்கோளிலியில்) அவனி விடங்கர், 'பிருங்க நடனம்' ஆடுகிறார்; திருவாய்மூரில் நீலவிடங்கர் 'கமல நடனம்' ஆடுகிறார்; திருமறைக்காட்டில் புவன விடங்கர், 'ஹம்ஸ பாத நடனம்' ஆடுகிறார்; திருவாரூரில் வீதிவிடங்கர் 'அசபா நடனம்' ஆடுகிறார். இந்நடனம். "ஒவ்வோர் உயிரின் இயக்கமான மூச்சு உள்ளும் வெளியும் போய் வரும் உன்னத இயக்கத்தை உணர்த்தும் தாண்டவம் ' என்றும், "அசபா நடன விழா ஒவ்வோர் ஆண்டும் பங்குனித் திங்களில் பெருவிழாவாக இன்றும் இத்திருக்கோயிலில் நடைபெற்று வருகிறது " என்றும், இந்நடனத்தின் சிறப்பை "அஜபாகல்பம்" எனும் வடமொழி நூல் விரித்துக் கூறுகின்றது என்றும், குடவாயில் திரு. பாலசுப்பிரமணியன் "திருவாரூர்த் திருக்கோயில்" என்னும் நூலில் கூறுகிறார்.

இவ்வசபா நடனம் ஆரூர் என்னும் ஒரு குறிப்பிட்ட தலத்தில் மட்டுமே நிகழ்வதாக எண்ணவேண்டாம். அண்டமெலாம் இது நிகழ்கிறது. என்றாலும் இதன் சிறப்பு, திருவாரூரில் உணர்த்தப் படுகிறது. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள்,

" குலவுமச பாநடத்தை
அண்டத்தி லுள்ளபடி பிண்டத்தி லுன்னாண
அருளுவாய் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
ஆனந்த வுல்லாசனே. "

என்று வேண்டியருளுகிறார்.

உற்சவ காலத்தில், அசபா நடனம் நிகழ இடந்தருவது ஒரு தண்டாகும். இதனை இன்றுமணித்தண்டு புள்ளத்தண்டு (பிள்ளைத் தண்டு) என்று கூறுகிறார்கள். மணித்தண்டு இடும்பணி ஆரகசிய மாகவே நிகழ்கிறது இன்றளவும் இக்கலையைக் காப்பாற்றி வரும் குடியினர் விழுப்பெருமர் என்ற வரலாற்றுச்சிறப்புமிக்க மரபினர் ஆவர். (திருவாரூர்த் திருக்கோயில், பக்கம் 206 காண்க.) தியாகேசர் அமர்ந்துள்ள ஆசனத்தை முதலில் இருபெரும் தண்டு களால் (வாரைகளால்) இணைத்து, ஒருவகைக் கயிறு போன்ற பிணைப்போடு லாவகமாக இணைப்பர். இவ்விணைப்பிற்கு மேல் பட்டுத்துணி சுற்றப்பட்டிருக்கும். பெரிய தண்டுகள் பெயரளவில் சுமக்கப்பெறும். முழுச்சுமையும் மணித்தண்டின் மூலம் எளிதாக மைக்கப்பெறும். இத்தண்டுபற்றிப் பாடல் ஆறு கூறுகின்றது.

" செங்கனக தண்டதனில் வீற்றிருந் தாடுமுன்
திருந்துமச பாநடத்தை "

என்ற சொற்களைக் கவனிக்கவேண்டும். மணித்தண்டுசுமக்கப்படும் பொழுது, கமலேசர் திருமேனி அமர்ந்துள்ள படிச்சட்டம் மிக அழகாக, இசையொலிக்கு ஏற்ப மேலும் கீழும் அசைந்தாடும். தூக்குவோரும் சுதி பேதம் காட்டி ஆடுவர். "திந்திமிதி" என்று இங்ஙனம் ஆடல் நிகழும் இதை,

" படியாட மேலண்ட பாதாள மாட இப்
பாரிதாங்கு பாந்தளாடப்
பாலுமதி யாடமறை யாடவய னுடனிரு
பத்மலோ சனனுட வான்
முடிவிலா வமரர்களும் முனிவர்களு மாடஅலை
மோதுமெழு கட லோசைபோல்
முழவுமத் தளதாள சங்கநா தம்பெரிய
முதண்ட முடளப்பச்
செடிகுடிலை மாயையிரு திரைவளைத் தேமலஞ்
சிதையதிந் திமிதியென்றே
செங்கனக தண்டதனில் வீற்றிருந் தாடுமுன்
திருந்துமச பாநடத்தை

அடியனேன் காணமுன் பென்னதவ மாற்றிலேன்
அருளுவாய் தியாகேசனே
அசைவில்சம லேசனே யசபா நடசனே
ஆனந்த வுல்லாசனே "

என்று தத்ரூபமாக நமக்கு பரமாசாரிய சுவாமிகள் காட்டியருளு கிறார். இம்மாநடனம் மலங்கள் மூன்றையும் மோசிக்க உதவு கின்றது, என்ற குறிப்பை நாம் மறத்தலாகாது.

பாடல் ஏழில் பரமாசாரிய சுவாமிகள், தாம் உற்ற தனு, கரண, புவன போகங்கள் முடிவு பெறவேண்டும் என்றும், பஞ்ச மலங்களும் பாழ்படல் வேண்டும் என்றும், சிவசத்தியால் காரியப் படும் சத்திகள் அனைத்தாலும், சந்திர சூரியர்களாலும் போற்றப்படும் தியாகேசரின் திருவடி தம்முடைய முடிக்கு அணியாக அமையவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக் கின்றார்.

" அம்பே ருகச் சரணே யடியனேன் முடியில்வைத்
தாளுவாய் தியாகேசனே "

என்ற இவ்வாக்கியம் நமக்கு தியான சுலோகமாக அமைந்து நம்மைக் கடைத்தேற்ற வேண்டும்.

மலமெனும் கோடையின் வெக்கை தணிய வேண்டும். மாயேயம் அழிய வேண்டும்; அதாவது, ஒழியாப் பிறப்பு இறப்புக்கள் ஒழிய வேண்டும்; கன்மம் கடியப்பட வேண்டும்; சச்சிதானந்த வெள்ளத்துள் அமிழ வேண்டும். இதுவே பாடல் எட்டு எடுத்துரைக்கும் செய்தி.

'' ஆனந்த வெள்ளத்து அழுத்திவிடு நின்னுடைய
காலினுல் தியாகேசனே ''

என்று நாமும் வேண்டிப் பணிய வேண்டும்.

'' மச்ச மெச்சு சுத்ரம் ரத்த பித்த மூத்ரம்
வைச்சி றைச்ச பாத்ர மநுபோகம்
மட்க விட்ட சேக்கை உப்பு முத்த வாழ்க்கை
மட்கு லப்ப தார்த்த மிடிபாறை
எச்சி லேச்ச பேய்க்கு மெய்ச்சி லேச்ச நாய்க்கு
மெய்ச்சி லேச்ச ஈக்கு மிரையாகும்
இக்க டத்தை நீக்கி அக்க டத்து ளாக்கி
இப்ப டிக்கு மோக்ஷ மருள்வாயே ''

என்று பிரார்த்தனை புரிந்த அருணகிரிநாதர் போல, பாடல் ஒன்பதில் பரமாசாரிய சுவாமிகள் வேண்டுகோள் விடுக்கிறார் மேலும் அருணகிரிநாதர்,

" நாவேறு பாமணத்த பாதார மேநினைத்து
நாலாறு நாலு பற்று வகையான
நாலாரு மாக மத்தி னூலாய ஞானமுக்தி
நாடோறு நானு ரைத்த நெறியாக
நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வ தற்கு னருள் கூர "

வேண்டும் என்று வேண்டியதைப் போலவே, பரமாசாரிய சுவாமிகளும்,

" பொல்லாத விருண்மலமயை நில்லாத வாழ்வைவெகு
புழுமலங் கட்டுபொதியைப்
புன்புலால் நாறிடும் புலைக்கலத் தைத்தினம்
புதுமைதரு பொய்ப்புரட்டை
நல்லோ ரெறிந்திடும் பாண்டத்தை நாய்நரிகள்
நாடிடும் பீழையுடலை
நானென்று மெனதென்று நானடு விராமல்நீ
நானா யிருக்கவைப்பாய்
கல்லாலி னிழலி லிருந்தகற் பகமே
கருணையங் கடலமுதமே
கரும்பினின் கட்டியே யொருவர்பூ ணாத
கவுத்தவ மகாரத்னமே
அல்லாரு மணிகண்ட வாளங்க துங்கத்தி
யம்பகத் தியாகேசனே
அசைவில்சம லேசனே யசபா நடேசனே
ஆனந்த வுல்லாசனே "

என்று வேண்டியருளுகிறார்.

கழிந்து போன பிறவிகளில் தமக்கிருந்த பற்றுக்களை எல்லாம் வேரும் வேரடி மண்ணுமில்லாமல் களைந்து எறிந்த பரமேஸ்வரனுக்கு நன்றி கூறி, முடிவாகத் தமக்கு வேண்டப்படும் பேற்றினை இறைவன் நல்கியருள வேண்டும் என்று சுவாமிகள் மன்றாடுகிறார்.

மூச்சோடு சம்பந்தம் உடையது அசபா நடனம். நாம் விடும் ஒவ்வொரு மூச்சும் இறையருளாலேதான் என்ற, நன்றி சிவணிய உணர்வே "அசபை" நமக்கு அருளும் செய்தி.

" உண்ணுஞ் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலைஎல்லாம் கண்ணன் " என்றனர் வேதம், தமிழ் செய்த மாறன் குருகூர் சடகோபனார். அசபை அறிந்தோர், "உண்ணுஞ் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை, வாங்கி விடும் மூச்சு எல்லாம் முக்கண்ணன்" என்பர்.

ஸ்ரீ அசபா நடனப் பதிகத்தை முறையாக ஓதினால் அசபையின் அநுபூதி, ஓதுவார் அனைவருக்கும் கிட்டும். இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக பரமாசாரிய சுவாமிகளின் சேவடிகள் வெல்க!

# ஆவணி மாதச் சிறப்பு நாட்கள்

17—8—89 வியாழன், மாதப்பிரவேச புண்ணியகாலம், திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். காயத்ரிஜபம்.

18—8—89 வெள்ளி, ஸ்ரீ ராகவேந்திரர் ஆராதனை.

21—8—89 திங்கள், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமிக்கு சம்வத்ஸர அபிஷேகம்.

23—8—89 புதன், வேளூர்கிருத்திகை. தருமை ஸ்ரீசண்முகர் அபிஷேகம் கிருத்திகை விரதம். கோகுலாஷ்டமி.

25—8—89 வெள்ளி, மயிலாடுதுறை குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

27—8—89 ஞாயிறு, சர்வ ஏகாதசி. வியசிரா. ஆவணி உச்சாரம்பம் 20-32. திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

28—8—89 திங்கள், சோமபிரதோஷம். வேளூர் விநாயகர் உற்சவ ஆரம்பம். செருத்துணைநாயனார் குருபூஜை.

29—8—89 செவ்வாய், ஆயில்யவிழா. மாதசிவராத்திரி, புகழ்த்துணை நாயனார், அதிபத்தநாயனார் குருபூஜைகள்.

30—8—89 புதன், சர்வ அமாவாசை, ஆவணி உச்சநிவர்த்தி 45-30. இளையான்குடிமாறர் குருபூஜை

31—8—89 வியாழன், மதுரை ஆவணிமூல உற்சவ ஆரம்பம்.

2—9—89 சனி, ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை.

4—9—89 திங்கள், விநாயகசதுர்த்தி. சதுர்த்திவிரதம். வேளூர் ஸ்ரீ வினைதீர்த்த விநாயகர் தீர்த்தம்.

7—9—89 வியாழன் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கும், ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமிக்கும் சம்வத்ஸராபிஷேகம், தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா முதல் நாள். குலச்சிறைநாயனார் குருபூஜை.

8—9—89 வெள்ளி, தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா இரண்டாம் நாள். கேதாரகௌரி விரதம் ஆரம்பம். வேளூரில் ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் அபிஷேகம். புறப்பாடு திருவையாறு சூரியபுஷ்கரணியில் தீர்த்தம் ஷை சூரிய புஷ்கரணியில் தெப்பம்.

9—9—89 சனி, ஆவணி மூலம், தருமை ஆதீனம் பூசை மடத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை, மாலை பட்டமளிப்பு விழா ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா நிறைவு நாள். குங்கலியக்கலயநாயனார் குருபூஜை.

12—9—89 செவ்வாய், சிரவணவிரதம், ஓணம் பண்டிகை.

13—9—89 புதன், பிரதோஷம். கரிநாள். ஸ்ரீமத் அசுதயலிங்கத் தம்பிரான் சுவாமிகள் மாகேசுவரபூஜை.

14—9—89 வியாழன், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.

15—9—89 வெள்ளி, பௌர்ணமி விரதபூஜையில் சர்க்கரை அபிஷேகம். எள்ளுருண்டைசாத்துதல், உமாமகேசுவர விரதம்.

16—9—89 சனி, மஹாளயபக்ஷ ஆரம்பம். கன்யாரவி 58-55.

NANASAMBANDAM Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

## விலைப் பட்டியல் - 8

1. திருநல்லூர், திருஆவூர்ப் பசுபதீச்சரத் திருப்பதிகங்கள் 0—75
2. திருக்குடவாயில் திருச்சேறைத் திருப்பதிகங்கள் 0—90
3. திருக்கொண்டீச்சரம், திருப்பனையூர், திருவிற்குடித் திருப்பதிகங்கள் 0—85
4. திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர்த் திருப்பதிகங்கள் 0—70
5. திருத்தென்குடித்திட்டை, திருப்புள்ளமங்கை திருச்சக்கரப்பள்ளித் திருப்பதிகங்கள் 0—60
6. திருநாரையூர்த் திருப்பதிகங்கள் 0—35
7. திருஇராமேச்சுரம் திருப்பதிகங்கள் 0—80
8. திருப்பரிதிநியமம், திருவெண்ணியூர்த் திருப்பதிகங்கள் 0—80
9. திருத்தேவூர், திருப்பள்ளிமுக்கூடல் திருப்பதிகங்கள் 0—80
10. திருவாழ்கொளிபுத்தூர், திருப்பழமண்ணிப் படிக்கரைத் திருப்பதிகங்கள் 0—60
11. திருக்கன்றுப்பூர், திருவலிவலம் திருப்பதிகங்கள் 1—20
12. திருஉசாத்தானம், திருஇடும்பாவனம், திருக்கடிக் குளம் திருப்பதிகங்கள் 0—80
13. திருப்புறம்பயம், திருவிசயமங்கை, திருவைகாவூர்த் திருப்பதிகங்கள் 0—60

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :— செயலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
தருமபுரம் - மயிலாடுதுறை 609001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-9-89.